Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு+VIII

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



அசல் 22 கரட் தங்க நகைகளையும்,
ஓடர் நகைகளையும் குறித்த நேரத்தில்
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள

கணேசா நகையகம்

194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P. : 021 222 5987

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆவணி– 17 ஆம் நாள் ஹிஜ்ரி 1426 றஜபு 27 (02.09.2005) வெள்ளிக்கிழமை இதழ்:335

## கிளிநொச்சியில் வரலாறு காணாத மக்கள் வெள்ளம்!



# ஒரு லட்சம் மக்கள் ஒன்றுதிரண்டு தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடனம்!

(கிளிநொச்சியிலிருந்து தீபன்)

தமிழ்மக்களின் அபிலாஷைகளையும், இறைமைக்கான போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கக் கோரும் வகையில் கிளிநொச்சிப் பிரகடன நிகழ்வில் - ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் உணர்வெழுச்சியுடன் பங்கேற்று வரலாறு படைத்தனர்.

நிகழ்வு நேற்றுமாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய எழுச்சிச்

(கிளிநொச்சியிலிருந்து தீபன்)

தமிழ்மக்களின் அபிலாஷைகளையும், இறைமைக்கான போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கக் கோரும் வகையில் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வில் - ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் உணர்வெழுச்சியுடன் பங்கேற்று வரலாறு படைத்தனர்.

கிளிநொச்சி நகர் இதற்கு முன்னர் கண்டிராத மிகப் பிரமாண்டமான இந்த எழுச்சிப் பிரகடன நிகழ்வு நேற்றுமாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய எழுச்சிச் செயலணியைச் சேர்ந்த இ. பிரபாகரன் தலைமையில் ஆரம்பமானது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# இறைமைக்கான எமது போராட்டத்தை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும்!

## எழுச்சிப் பிரகடனத்தில் கோரிக்கை

கிளிநொச்சி —

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை வாழ்வுரிமையையும், சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு - எமது மரபுவழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எமது இறைமைக்கான போராட்டத்தை சர்வதே சமூகம் அங்கீகரிக்கவேண்டும் என்று கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் இன்று பயங்கரமான சிங்கள, பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகிறது. இது, தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக வழியில் அமைந்த எந்தவொரு தீர்வுக்குமான கதவுகளையும் முற்றாக மூடியுள்ளது.

இந்த நிலையில் தமிழர் தாயகத்தில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் தமிழ் பேசும் மக்களாகிய நாம் இன்று அடைந்துள்ள அவலமான தும், ஆபத்தானதுமான நிலையைச் சர்வதேச சமூகத்தின் முன்னால் வெளிப்படுத்தி எமக்கான நியாயத்தையும், அங்கீகாரத்தையும் கோருகின்றோம். (02 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு தாக்குதலுக்கு கண்காணிப்புக்குழு கவலை!

கொழும்பு —

மட்டக்களப்பில் தொடரும் தாக்குதல்கள் குறித்து இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு கவலை தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு நிலைமைகளைச் சீர்குலைத்து வரும் இத்தகைய தாக்குதல்களை நிறுத்துமாறு அரச மற்றும் விடுதலைப்புலிகள் தரப்பினரைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கோரியுள்ளது.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் மட்டும் மேற்கொள்ளப்பட்ட 6 தாக்குதல்களைத் தொடர்ந்து கண்காணிப்புக்குழு இக்கோரிக்கையை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜீலை மாதத்தைவிட ஒகஸ்ட் மாதம் யுத்தநிறுத்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியில் பேச்சு நடத்தும் யோசனையை அரசு நிராகரிப்பு!

கொழும்பு —

போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களை புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சியில் நடத்தும் யோசனையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அரசின் இந்த நிலைப்பாட்டை சுகாதாரத்துறை அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகள் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் சமாதானப் பேச்சை நடத்தலாமெனத் தெரிவித்தனர். ஆனால், வெளிநாட்டில் பேச்சு நடத்தப்படுவதை அரசாங்கம் எதிர்க்கிறது.

எனினும் இருதரப்பினருக்கும் இடையேயான பேச்சுக்களை - இரு பகுதியினருக்கும் பொதுவான ஓமந்தையில் நடத்தலாமென அரசாங்கம் தெரிவித்தது. இதனை விடுதலைப் புலிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தலைவரின் பொறுமை ஆபத்தானது!

## ஜெயானந்தமூர்த்தி எம்.பி எச்சரிக்கை

கிளிநொச்சி —

நீடித்த நிழல் யுத்தம் நடத்தப்பட்டு வரும் நிலையிலும், மக்களுக்காக எமது தேசியத் தலைவர் காத்துவரும் நெடிய பொறுமை மிகவும் ஆபத்தானது என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டும் என்று - தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி எச்சரித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டில் அவர் மேலும் உரையாற்றும்போது -

கடந்த காலங்களில் மிகவும் உக்கிரமான சண்டைகள் நடைபெற்று அரசாங்கம் எமது விடுதலைப் புலிகளின் படைகளுக்கு ஈடாக நிற்கமுடியாத நிலையில் புறமுதுகிட்டு ஓடி சமாதான ஒப்பந்தத்துக்கு வந்தது.

இன்றும் அந்தச் சமாதான ஒப்பந்தத்தை - அமைதிப் பேச்சுக்களை உறுதியாக நடத்த இயலாத வக்கற்ற நிலையிலேயே அரசு இருக்கிறது.

இந்த நிலையில், எங்களது குரலாக - வேண்டும் தமிழீழம் என்ற கோரிக்கையை சமூகத்துக்கு எடுத்துக் கூறுகிறோம்.

அமைதிப் பேச்சுக்கள் மூலம் அமைதியான முறையிலேயே எமது உரிமைகளை நாங்கள் பெற விரும்புகிறோம்.

கடந்த காலங்களில் பல அமைதிப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இறைமைக்கான எமது போராட்டத்தை...

தமிழ் பேசும் மக்களாகிய நாம் இலங்கைத் தீவினை ஐரோப்பியர்,ஆக்கிரமிக்க முன்னர் தனியரசாக இருந்து வந்துள்ளோம். 1833 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையில் ஒற்றையாட்சி முறையைப் புகுத்திய போது, தமிழர் தாயகம் சிங்கள தேசத்தோடு இணைக்கப்பட்டது. அப்பொழுது அது தன் இறைமையை இழந்ததையும், அதன் பின் 1948 இல் இலங்கையை விட்டு ஆங்கிலேயர் வெளியேறியபோது, தமிழ் பேசும் மக்களின் இறைமையை, எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருந்த சிங்களவரிடம் ஒப்படைத்துச் சென்றதையும் சுட்டிக் காட்டுகின்றோம்.



இவ்வாறு சிங்கள சமூகம் முறையற்ற வகையில் பெற்றுக் கொண்ட இறைமையின் மூலம் நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி மிக அநாகரிகமான முறையில் தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்பட்டனர். குடியுரிமையும், சட்டத்தின் மூலம் இலட்சக்கணக்கான மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. தனிச் சிங்களச் சட்டத்தின் மூலம் மொழியுரிமையும், வேலை வாய்ப்பு உரிமையும் பறிக்கப்பட்டன. கல்வித் தரப்படுத்தல் சட்டம் மூலம் கல்வி உரிமை மறுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசர காலச் சட்டம் என்பன மூலம் முழு மனித உரிமையும் மறுக்கப்பட்டது. எமது பாரம்பரிய வாழ்விடங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக நிலச் சூறையாட

ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும், 1965 ஆம் ஆண்டு டட்லி - செல்வா உடன்படிக்கையையும் இதற்குச் சான்றாக வைக்கிறோம். இவ்வாறாக மென்முறைப் போராட்ட வடிவங்களைக் கைக்கொண்ட போதும் எம்மக்கள் மீது மிக மோசமாக வன்முறைகள், இனப்படுகொலைகள், பாலியல் கொடூரங்கள் என்பன பிரயோகிக்கப்பட்டன.

இந்நிலையில் 70 களின் முற்பகுதியில் ஆயுதம் தாங்கிய தமிழ் மக்களின் தற்காப்புக்கும், விடுதலைக்குமான போராட்டத்துக்கு தமிழர் தரப்பு நிர்ப்பந்திக்கப்படுகிறது.

எனவே - அமைதி வழியில் அரசியல் தீர்வுகளை எட்டுவது இயலாது என்பதை ஏற்றுக் கொண்ட தமிழ்த் தலைமைகள், 1976 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் நாள் வட்டுக்கோட்டையில் தமிழீழப் பிரகடனத்தை வெளியிட்டனர். பின்னர் அரசியல் அரங்கில் அதற்கான மக்கள் ஆணையை 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறிலங்கா நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றுக்கொண்டனர்.

ஆயுதம் தாங்கி எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நாம், தமிழ் மண்ணையும், தமிழ் பேசும் மக்களையும் ஆழமாக நேசிக்கும் ஆற்றல் மிகுந்த சிறந்த ஒரு தேசியத் தலைவரையும், ஒரு மரபு வழிப்போரை நடத்தவல்ல படையணிகளையும் கண்டு நிமிர்ந்தெழுந்தோம். இதன் மூலம் இலங்கைத் தீவில் ஒரு தனித் தேசிய இனமாக தமிழ் மக்கள் நாம் வாழ்ந்து வருகிறோம் என்

இந்த வரலாற்றுப் போக்கில் தமிழர் தாயகத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு என்றொரு நடைமுறை, அரசுக்கான கட்டுமானங்கள் நேர்த்தியான முறையில் கட்டியெழுப்பப்படுகின்றன.

இந்த நிலையில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை யுத்தத்தால் வெல்ல முடியாது என்பதைச் சிறிலங்கா அரசு உணர்ந்து கொண்டது. சமகாலத்தில் சர்வதேச சமூகம் இந்த இன முரண்பாட்டை அமைதி வழியில் தீர்ப்பதற்கான வாய்ப்பை எமது தேசியத் தலைமையிடம் கோரியது. எமது தேசியத் தலைமை தாமாக முன்வந்து யுத்த நிறுத்தம் செய்து கொண்டது.

வேறு வழியின்றியும், சர்வதேச அழுத்தம் காரணமாகவும் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்பாடு செய்ய முன்வந்தது. அதன்படி 22-02-2002 ஆம் நாளில் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களும் கையொப்பமிட்டு ஒரு யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டது.

தொடர்ந்து ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. இந்தப் பேச்சுக்களின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களைச் சிங்கள அரசு நடைமுறைப்படுத்தத் தவறியது. இதனால் நேரடிப் பேச்சுக்கள் நின்றுபோக, இடைக்கால யோசனையாக, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபு முன்வைக்கப்பட்டது. இது பற்றியும் தொடர்ந்து பேச சிறிலங்கா அரசு முன்வராததால் பேச்சுவார்த்தை மீண்டும் தொடர்வதற்கான சாத்தியங்கள் முற்றாக அருகிப் போயின.

இவ்வாறாக கடந்த மூன்றரை ஆண்டுகளாய் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கான எதிர்பார்ப்புகள் யாவும் பொய்த்துப் போய்விட்டன. சிறிலங்காப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் வளம் நிறைந்த எமது சொந்த நிலங்களும், செல்வம் கொழிக்கும் எமது கடல் வளமும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முடக்கப்பட்டுள்ளது.

இறுதியாக உலகை உலுக்கிய சுனாமிப் பேரழிவுக்குப் பின்னரும் சிங்கள மேலாதிக்கப் போக்கு மாறவில்லை என்பதை சுனாமி அனர்த்த நிவாரணப் பொதுக் கட்டமைப்புக்கு நேர்ந்த விபத்து நிரூபித்துவிட்டது. மனிதப் பேரழிவு அவலங்களால்கூட சிங்களப் பௌத்த பேரினவாத வெறிக்குள் இறுகிப் போயிருக்கும் நெஞ்சுகளை மாற்ற முடியாது என்பதை உலகம் கண்டு கொண்டுள்ளது.

இவற்றையெல்லாம் புறந்தள்ளி விட்டுப் பதவிக்கான போட்டியில் சிங்கள அதிகார வர்க்கம் முற்றாகச் சிக்கியுள்ளது. மீண்டும் ஒரு யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தோற்கடிப்பதற்கான படைக்கலப் பெருக்க நடவடிக்கைகளையும், பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் அவர்கள் செய்து வருகிறார்கள். இவை யாவும் சமாதான நடைமுறைக்கான சர்வதேச சமூகத்தின் ஈடுபாடு இலங்கைத் தீவில் நிகழ்ந்து கொண்டிருக்கும் போதே நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்.

இந்த நிலையில் சிங்கள ஆட்சியாளர்கள், தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான எந்தவொரு தீர்வையும் முன்னெடுக்கமாட்டார்கள் என்பதை நாம் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்திக் கொள்கின்றோம். இந்த உண்மைகளை சர்வதேச சமூகம் யுத்த நிறுத்த உடன்படிக்கை கால நடவடிக்கைகள் மூலம் புரிந்து கொண்டிருக்கும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்கிறோம்.

இந்த உண்மை நிலைமையின் காரணத்தால் நாம் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாகச் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் நிர்ப்பந்திக்கப்படுகிறோம். எனவே, எமது தாயக நிலத்தையும், கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா இராணுவம் எமது மண்ணை, கடலை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் -

எமது நிலத்தில், எமது பலத்தில், எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாக வேண்டும் என்றும், அந்த உன்னதமான உயரிய சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ் மக்கள் அணி திரண்டபடியே உள்ளோம் என்பதையும், இந்த எழுச்சிப் பிரகடனத்தின் மூலம் முன்வைக்கும் அதேவேளை -

தமிழ் பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ் வுரிமையையும் , சுதந்திர வாழ்வையும் ஏற்றுக் கொண்டு எமது மரபு வழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும், எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென்று சர்வதேச சமூகத்தை நாம் கோருகின்றோம் என அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

MBBS

ளச் சட்டத்தின் மூலம் மொழியுரிமையும், வேலை வாய்ப்பு உரிமையும் பறிக்கப்பட்டன. கல்வித் தரப்படுத்தல் சட்டம் மூலம் கல்வி உரிமை மறுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசர காலச் சட்டம் என்பன மூலம் முழு மனித உரிமையும் மறுக்கப்பட்டது. எமது பாரம்பரிய வாழ்விடங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக நிலச் சூறையாடலுக்குட்பட்டு எமது குடித்தொகைப் பரம்பல் முற்றாகச் சிதைக்கப்பட்டது. இவ்வாறாகத் தமிழ் பேசும் மக்களாகிய எமது வாழ்வுரிமை பறிக்கப்பட்டது.

சட்டங்கள் மட்டுமன்றி, இலங்கைத் தீவின் அரசியல் யாப்புக்களுமே இனவாத ஒடுக்குமுறைக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டன. சோல்பரி ஆணைக்குழுவின் அரசியல் யாப்பில் சிறுபான்மை மக்களைப் பாதுகாக்கவென உருவாக்கப்பட்ட 29 ஆவது பிரிவு, பின்னர் 72 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிறிலங்கா சோசலிச ஜனநாயக குடியரசு யாப்பின் மூலம் நீக்கப்பட்டது. இந்த யாப்பில் பௌத்த மதம் அரசாங்க மதமாக்கப்பட்டு, இன ஒடுக்குமுறைக்கான யாப்பு வடிவமைக்கப்பட்டது. 78 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பிலும் இது மேலும் தீவிரமாக்கப்பட்டது. எனவே நீதி வழங்கப்பட வேண்டிய அரசியல் யாப்பு, அநீதியின் உறைவிடமானது.

இத்தகைய இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராகத் தமிழ் பேசும் மக்களின் அப்போதைய அரசியல் தலைமை அங்கீகரிக்கப்பட்ட நாகரிகமான அரசியல் வழிமுறைகளையும், மென்முறைப் போராட்ட வடிவங்களையும் கைக்கொண்டது. அவற்றைத் தணிவிக்கும் முகமாகச் சிங்கள ஆட்சியாளர்கள் ஒப்பந்தங்கள் செய்வதையும், பின் அவற்றைக் கிழித்தெறிவதையும் வழமையாகக் கொண்டிருந்தார்கள். 1957

ஆயுதம் தாங்கி எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நாம், தமிழ் மண்ணையும், தமிழ் பேசும் மக்களையும் ஆழமாக நேசிக்கும் ஆற்றல் மிகுந்த சிறந்த ஒரு தேசியத் தலைவரையும், ஒரு மரபு வழிப்போரை நடத்தவல்ல படையணிகளையும் கண்டு நிமிர்ந்தெழுந்தோம். இதன் மூலம் இலங்கைத் தீவில் ஒரு தனித் தேசிய இனமாக தமிழ் மக்கள் நாம் வாழ்ந்து வருகிறோம் என்னும் உண்மையை உலக அரங்கில் ஓங்கி ஒலித்தோம்.

இந்தப் போராட்ட காலத்தில் சிங்கள ஆட்சியாளர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போதும் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பும், இன அழிப்பும் தமிழர் தாயகத்தில் நடத்தப்பட்டன. கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுக்கள், எறிகணை வீச்சுக்கள் ஆகியன பாடசாலைகளிலும், மக்கள் குடியிருப்புக்களிலும், வழிபாட்டுத் தலங்களிலும் அடிக்கடி நடத்தப்பட்டு, எமது மக்கள், பச்சிளம் பாலகர் முதல், முதியோர்வரை கோரமாகப் பலியெடுக்கப்பட்டனர்.

பலவிதமான இராணுவ நடவடிக்கைகளாலும் சொந்த மண்ணிலிருந்து தமிழ் மக்கள் இடம்பெயர்க்கப்பட்டு ஏதிலிகளாக அலைக்கப்பட்டனர். இத்தகைய அரச, பயங்கரவாதக் கொடூரங்களையெல்லாம் அரசு என்ற முகத்திரை கொண்டு சர்வதேச சமூகத்துக்கு முன் சிங்கள பௌத்த பேரினவாதம் மூடி மறைத்தது. ஆயினும், எமது விடுதலைப் போராட்டம் ஆக்கிரமிப்புக்களை எதிர்கொண்டு, முறியடித்து, வெற்றிகளைக் குவித்தது. இந்த வெற்றிகளின் பின்னால் தமிழ் மக்கள் அனைவரும் பொங்கு தமிழர்களாய்க் கிளர்ந்தெழுந்து தேசிய விடுதலைப் போருக்குத் தோள்கொடுத்தனர்.

இறுதியாக உலகை உலுக்கிய சுனாமிப் பேரழிவுக்குப் பின்னரும் சிங்கள மேலாதிக்கப்

மென்று சர்வதேச சமூகத்தை நாம் கோருகின்றோம் என அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டதாரி ஆசிரியர் நியமனம் விபரங்கள் கையளிப்பு

கொழும்பு

வடக்கு- கிழக்கு பட்டதாரி பயிலுநர்களுக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்திபெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பெருத்தமான பாடசாலைகள் பற்றிய விபரங்கள் வடகிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் வடகிழக்கு கல்வியமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 29 ,30 ஆம் திகதிகளில் வட கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் கல்விப் பணிப்பாளர்களுக்கு நடத்தப்பட்ட மாதாந்தக் கூட்டத்திலேயே இந்த விபரம் கையளிக்கப்பட்டது.

பரீட்சையில் சித்திபெற்ற பட்டதாரிகளுக்கு அவர்கள் கற்பிக்கும் பாடசாலைகளில் புதிய நியமனம் வழங்கப்படும் என் றும், சித்தியடையாத பட்டதாரி பயிலுநர்களும் தற்பொழுது கற்பிக்கும் பாடசாலையிலே தொடர்ந்து கற்பிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புதிய நியமனம் அடுத்த வாரமளவில் வழங்கப்படலாமெனத் தெரிய வருகிறது.


MBBS

VMRF - MEDICAL COLLEGES
(1) Salem (2) Karaikac (3) Pondichery
South India

Approved by SLMC & WHO

DURATION
4 ½, Years +
1 year internship

India | VMRF RANSGIT | Thailan

International off Shore Programme in Medicine

DURATION
2 yrs in Bangkok ▸ Thailand
2 ½ yrs in Salem ▸ India
1 yr Intership in Salem ▸ India

Sole Representatives in Sri Lanka
NN CONSULT
No.60 (1st Floor)
Peterson Lane, Colombo-06.
Tel : 555 88 33 Fax : 555 88 44
E-mail : nnconsult@sltnet.lk

# தற்காலிக கொட்டகைகளில் வாக்களிப்பு நிலையங்கள்!

## தேர்தல் திணைக்களம் ஆலோசனை

கொழும்பு—

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தற்காலிக கொட்டகைகளை அமைத்து தேர்தல் வாக்களிப்பு நிலையங்களை ஏற்படுத்த தேர்தல் திணைக்களம் முடிவுசெய்துள்ளது.

முன்னைய தேர்தல்களில் தேர்தல் நிலையங்களாகப் பயன்படுத்தப்பட்ட கட்டடங்கள் சுனாமியால் அழிந்து போனதால் இத்தகைய மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவின் தலைமையில் அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களும் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்த விடயம் குறித்து விவாதிக்கப்பட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்களையும், தெரிவத்தாட்சி அலுவலர்களையும் தனியே அழைத்து அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

சுனாமியால் பல இடங்களில் இருந்து மக்கள் முற்றாக வெளியேறியுள்ளனரெனவும், தேர்தல் வாக்களிப்பு நிலையங்களை அமைக்க கட்டடங்கள் இல்லையென்றும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் தெரிவித்தனர்.

நாடுமுழுவதும் அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்கள் குறித்து ஆராய்ந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் - தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குத் தெரிவித்தார்.

அத்துடன், அனைத்து மாவட்டங்களிலும் வாக்காளர் பட்டியல் பூர்த்திசெய்யப்பட்டுவிட்டதா என்பதுகுறித்து தனக்கு அறியத்தருமாறும் கேட்டுள்ளார்.

இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகள் எண்ணும் நிலையங்களைக் குறைக்குமாறும், இயலுமான அளவு செலவுகளைக் குறைக்குமாறும் தேர்தல் ஆணையாளர் ஆலோசனை வழங்கினார்.

தேர்தல் தொடர்பாக பெருமளவான பணிகளை ஆற்ற வேண்டியிருப்பதாகவும் அதனால் நவம்பர் ஐந்தாம் திகதிக்குப் பின்னர் தேர்தலை நடத்துமாறும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் பலரும் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

நவம்பர் மாதம் 4 ஆம் திகதி நோன்புப் பெருநாள் என்பதால் முஸ்லிம்கள் நோன்பு அனுஷ்டிக்கும் காலப்பகுதியைத் தவிர்த்து தேர்தலுக்கான திகதியை அறிவிக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவர் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்தார். அது குறித்து கவனம் செலுத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் அவருக்கு உறுதியளித்தார்.

இதேவேளை, அனைத்து மாவட்டங்களுக்கும் உத்தியோகபூர்வ தேர்தல் அறிவிப்புப் பத்திரங்கள் அனுப்பும் நவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், யாழ்.மாவட்டத்திற்கு விமானம்மூலம் அவற்றை அனுப்புவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (தே)

# பிரதமருடன் ஜே.வி.பி. சந்திப்பு

கொழும்பு—

ஆளும்கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுடன் ஜே.வி.பி நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாகப் பேச்சுக்களை நடத்தியது.

நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன், மங்கள சமரவீரவும் - ஜே.வி.பி சார்பில் ரில்வின் சில்வா, அனுரகுமார திஸநாயக்க, விமல் வீரவன்ச ஆகியோரும் பங்கு கொண்டனர்.

பிரதமருடனான தொடர் பேச்சுக்கள் தமக்கு மகிழ்சியளிப்பதாக ஜே.வி.பி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# 300 கூட்டங்களில் மகிந்த பங்கேற்பார்!

கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ - சுமார் 300 தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்கவுள்ளார்.

அனைத்துத் தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் இந்தக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் நடவடிக்கைகளுக்கான குழு தெரிவித்துள்ளது.

பிரதமரின் தலைமையில் எதிர்வரும் நாட்களில் ஆனமடுவ, கினிகத்ஹேன, கொத்மலை, மத்துகம, பத்தேகம, கிரிபத்கொட, ஹரிஸ்பத்துவ, பிங்கிரிய, கடுவெல ஆகிய இடங்களில் இந்தக் கூட்டங்கள் நடைபெறும். இந்தக் கூட்டங்களில் முக்கிய அமைச்சர்களும் பங்கேற்கவுள்ளனர்.



அத்துடன் - தேர்தல் தொடர்பாக பலதுறைகளைச் சேர்ந்த கல்விமான்களின் சந்திப்புக்கள் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் மாகாணசபை மற்றும் பிரதேசசபை உறுப்பினர்களுக்கும் - பிரதமருக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த செவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் நடைபெற்றது.

# தனியலகை ஏற்பவரையே முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்கும்

## ஹசன் அலி தெரிவிப்பு

கொழும்பு—

கிழக்குப் பகுதியில் முஸ்லிம்களுக்கு தன்னாட்சி நிர்வாகம் அமைப்பதாக உறுதியளிக்கும் வேட்பாளரையே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்கவுள்ளதாக - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது-

கிழக்குப் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குத் தன்னாட்சி நிர்வாகம் அளிக்கப்படும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதித் தேர்தலுக்கான முக்கிய கட்சிகளின் வேட்பாளர்கள் அறிவிக்கவேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த திங்கட்கிழமை சந்தித்துப் பேசுகையில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார்.

இந்தக் கோரிக்கை குறித்து தமது கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துவதாக ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

தேவைப்படுமாயின் முஸ்லிம் பிரதிநிதிகள் அடங்கிய குழு ரணில் விக்கிரமசிங்கவுடன் இது குறித்து பேச்சுக்களை நடத்தும்.

இதே நிபந்தனை சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ முன்பும் வைக்கப்படும் என்றும் ஹசன் அலி மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப் புலிகள்மீது குற்றச்சாட்டு; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி!

கொழும்பு—

பாரிய யுத்தநிறுத்த மீறல்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளதாக - பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல்செய்தது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இது குறித்துப் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர் மாவை சேனாதிராசா - இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் முழுநாள் விவாதம் நடத்த அனுமதிக்கப்பட்டால் உரிய விளக்கத்தைக் கூட்டமைப்பு தாக்கல் செய்யும்.

ரத்னசிறி விக்கிரமநாயக்கவால் குற்றஞ்சாட்டப்படுகின்ற யுத்தநிறுத்த மீறல்கள் பலவற்றில் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பிருக்கிறதா என்பது சந்தேகத்தை எழுப்புவதாகவும் மாவை சேனாதிராஜா கூறினார்.

அவசரகாலச் சட்டம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ரத்னசிறி விக்கிரமநாயக்க - தமிழீழ விடுதலைப் புலிகள் 3006 யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபட்டதாகவும் - படையினர் வெறும் 132 யுத்தநிறுத்த மீறல்களில் மட்டுமே ஈடுபட்டதாகவும் கூறினார்.



போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்களுக்கும் - அரச புள்ளிவிபரங்களுக்கும் வேறுபாடு இருப்பதாகவும் கூட்டமைப்பு சார்பில் சுட்டிக்" காட்டப்பட்டது.

# ஜனாதிபதி தேர்தலால் பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணி தாமதமாகுமாம்!

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சிடும் பணிகளை அரச அச்சகம் மேற்கொள்ள இருப்பதால் பாடப்புத்தகங்களை அச்சிடும் பணி தாமதமாகக்கூடும் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக கல்வியமைச்சகம் - அரச அச்சகத்துறையுடன் பேச்சுக்களை நடத்திவருகிறது. கல்வியமைச்சின் சார்பில் 71 தலைப்பிலான பாடப் புத்தகங்கள் அச்சிடக் கொடுக்கப்பட்டன.

இவற்றில் 31 தலைப்பிலான புத்தகங்களே முடிவடைந்து அமைச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தேர்தல் பணி தொடர்பான அச்சுப் பணிகளை அரச அச்சகத்துறை மேற்கொள்ளவேண்டியிருப்பதால் பெரும்பான்மையான பாடப் புத்தகங்களை அச்சடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

# சரக்குக் கப்பல் மூழ்கியது

சென்னை—

தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 950 தொன் நிலக்கரி எரிசாம்பலை ஏற்றிக்கொண்டு இலங்கைக் கப்பல் ஐடா கடந்த ஞாயிறு இரவு புறப்பட்டது.

30 கடல் மைல் தூரம் சென்றபோது எரிசாம்பல் பாரம் ஒரு பக்கம் சரிந்ததால் கப்பல் கடலில் மூழ்கத் தொடங்கியது. கப்பல் கப்டன் தாஸ் யூசப் - தூத்துக்குடி துறைமுகத்துக்கு வயர்லெஸ் மூலம் தகவல் கொடுத்தார்.

இந்த நிலையில் கொங்கொங்கைச் சேர்ந்த சரக்குக் கப்பல் நியூவேவா அந்த வழியாக வந்தது. அந்தக் கப்பலின் கப்டன் - இலங்கை கப்பல் கப்டன், முதன்மை அதிகாரி, முதன்மை பொறியியலாளர் ஆகியோரை மீட்டனர். மீதமுள்ள 7 பேரையும் மீட்புக் கப்பல் நாயக்தேவி மூலம் மீட்டுவந்தனர்.

## ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர்

# 70 ஆயிரம் பேருக்கு தேசிய அடையாள அட்டை!

கொழும்பு—

சுனாமி அனர்த்தத்தின்போது தேசிய அடையாள அட்டைகளை இழந்த அனைவருக்கும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குமுன்னர் அவற்றை வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் தேசிய அடையாள அட்டைகளை இழந்தவர்களில் அரைவாசிப் பேருக்கு இதுவரை அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் கே.வீரசேன தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தால் அடையாள அட்டைகளை இழந்த 70 ஆயிரம் பேருக்கு அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊடகவியலாளர் ரமேஷ் நீதிமன்றால் விடுதலை!

கொழும்பு—

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வீரகேசரியின் குருநாகல் செய்தியாளர் சுப்பிரமணியம் ரமேஷ் கடந்த திங்கட்கிழமை நீதி மன்ற உத்தரவின்பேரில் விடுதலை செய்யப்பட்டார்.

இவருடன் கைதுசெய்யப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த மூன்று தமிழ் இளைஞர்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் அறிக்கை முன்வைத்தனர்.

குருநாகல் மாவட்ட நீதிமன்றம் - பொலிஸ் அறிக்கையை ஏற்றுக்கொண்ட பின்னர் ஊடகவியலாளர் ரமேஷை விடுதலை செய்தது. ஏனைய மூவரையும் பிணையில் செல்ல அனுமதித்தது.

# அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சிங்களவரே தீர்மானிக்கும் சக்திகள்

## ஓமல்பே சோபித தேரர்

கொழும்பு—



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிங்களவர்களே தீர்மானிக்கும் சக்திகளாக உருவாகி இருப்பதாக - ஜாதிக ஹெல உறுமய பொதுச் செயலர் ஓமல்பே சோபித தேரர் கூறினார்.

தேர்தல் களத்தில் உள்ள சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகியவற்றுடன் இணக்கப்பாட்டை உருவாக்குவதில் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகள் முன்னெடுப்புகளை மேற்கொண்டுவருவதாகவும், தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் நிறைவேற்ற இயலாத கோரிக்கைகளையே முன்வைத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜாதிக ஹெல உறுமயவுடன் இரு கட்சிகளும் இணக்கப்பாட்டுக்கு முன்வருவதன்மூலம் எதிர்வரும் தேர்தலில் சிங்களவர்களே தீர்மானிக்கும் சக்தியாக இருப்பார்கள். ஜனாதிபதித் தேர்தலில் 5 கோரிக்கைகளை ஹெல உறுமய முன்வைத்துள்ளது. இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் கட்சியை ஆதரிப்பதாகவும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

யாரை ஆதரிப்பது என்பது குறித்து எதிர்வரும் 4 ஆம் திகதியே ஜாதிக ஹெல உறுமய உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடவுள்ளது.

# சக்கர நாற்காலி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லை ஆதீன விருந்தினர் மண்டபத்தில் வலுவிழந்தோருக்கான சக்கர நாற்காலி வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், உதவி அரசாங்க அதிபர் மோகன்ராஜ், நிகொட் பணிப்பாளர் நவரட்ணராஜா, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர், யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஸ், நல்லூர் உதவி அரசாங்க அதிபர், நல்லை ஆதீன கர்த்தா, மாநகர சபை ஆணையாளர் குணராஜா, இலங்கை வங்கி முகாமையாளர், வைத்திய கலாநிதி தியாகராஜா, யாழ். மாவட்ட உதவி அரசியற்துறைப் பொறுப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதி மேலாளர், பணிப்பாளர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# படையினரால் கைதானவர் இதுவரை வீடு திரும்பவில்லை!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது - ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்ட தனது கணவன் இதுவரை வீடு திரும்பவில்லையென ஜெயமேரி அன்ரன் என்ற பெண் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.

கச்சாய் வீதி - கொடிகாமத்தைச் சேர்ந்த முடியப்பு அன்ரன் (வயது 37) என்பவரே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இதுவரை வீடு திரும்பாதவராவார்.

கடந்த ஜூலை மாதம் 27 ஆம் திகதி வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும்போது ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து அன்ரன் கைதுசெய்யப்பட்டதாக, அவருடன் வந்த உறவினர்- அன்ரனின் மனைவியிடம் தெரிவித்தார்.

இதனையடுத்தே மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மனைவி முறையிட்டுள்ளார்.

இவரது முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட யாழ். மனித உரிமைக்குழு அதிகாரி - வவுனியா பொலிஸ் நிலையத்திற்கும் தமது தலைமை அலுவலகத்திற்கும் இது தொடர்பாக அறிவித்திருப்பதாகத் தெரிவித்தார்.

# பாராட்டு விழா

தெல்லிப்பளை

2005ஆம் ஆண்டு தேசியமட்ட தடகளப் போட்டியில் யாழ்.மாவட்டம் சார்பாக பங்குபற்றி - உயரம் பாய்தலில் முதலாம் இடத்தை வென்று தங்கப்பதக்கம் பெற்ற வலி-வடக்கு பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த சி.கமலமோகனுக்கு பாராட்டு வைபவம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

# நல்லூரில் இன்று

மானிப்பாய்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, இன்று காலை 7 மணிக்குத் தேர்த்திருவிழா இடம்பெறும்.

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் - தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு ஏ.கே.கருணாகரனின் பாட்டு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் - வயலின் - சியாமளாங்கி கருணா கரன், மிருதங்கம் - டானியல் வரதராஜன், கெஞ்சிரா - கே.அனந்த கோபன் ஆகியோர் இசைக்கவுள்ளனர்.

(100)

# செயன்முறைப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது!

யாழ்ப்பாணம்

இன்று பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவிருந்த சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தால் இடம்பெறமாட்டாது.

இந்தப் பரீட்சைக்குரிய திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும், எனினும் இன்றையதினம் எழுத்துப் பரீட்சைக்குத் திகதிபெற்ற பரீட்சார்த்திகளுக்கு எழுத்துப் பரீட்சை நடைபெறுமென யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள பதில் உதவி ஆணையாளர் பத்மநாதன் தெரிவித்தார்.







**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

சத்தியராஜ், வடிவேல், நமீதா நடித்த நகைச்சுவை நிறைந்த திரைப்படம்



**இங்கிலீஷ்காரன்**

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

காதல் புகழ் பரத், ரேணுகாமேனன் நடித்த



**பெப்ரவரி 14**

காட்சிகள் : 11.00, 2.45, 5.00 (பு.நே)

**நாகம்ஸ்** சுன்னாகம்

டொல்பி ஒலிநயத்துடன்

விக்ரம், சதா, விவேக் மற்றும் பலர் நடித்த



**அந்நியன்**

காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

**ராஜா** யாழ்ப்பாணம்

இன்றுமுதல்

சுரேஸ்கோபி, மஞ்சு, விஜய்மேனன், விமல்ராஜ் மற்றும் பலர் நடித்த

**பத்ரம்**

விரைவில்... சூர்யா, அசின் **கஜினி**

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**மனோகரா** யாழ்ப்பாணம்

ஜெயம் ரவி, ரேணுகாமேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த



(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)

அடுத்த வெளியீடு:- 09.09.2005 முதல் சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த **தொட்டி ஜெயா**

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 19 - 06 - 1942 |  | 03 - 08 - 2005 |

## அமரர் அப்புத்துரை பாலசுந்தரம்

**அறுபிரகாம்** (பிரபல மெக்கானிக் - ஐயாமணி)

உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம்.

03-08-2005 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி 02-09-2005 வெள்ளிக்கிழமை இன்று அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். **இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.**

71/3, புகையிரத வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2034)

இங்ஙனம்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## செல்வி சுப்பிரமணியம் செல்வராணி

இருபாலை விதானையார் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுப்பிரமணியம் செல்வராணி 01-09-2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-சிவபாக்கியம் (பொலிஸ் மணியம்) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் பரமானந்தம் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, நித்தியானந்தன், மற்றும் விஜயராணி, சிவானந்தன் (இத்தாலி), கிருபானந்தன் (ஆசிரியர், யா/நாவற்குழி மகாவித்தியாலயம்), விவேகானந்தன் (யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் அ.த.க. பாடசாலை), கருணாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சண்முகராசா (யாழ்ப்பாணம்), செல்வராணி (ஜேர்மனி), இராஜேஸ்வரி , மதிவதனி (இத்தாலி), தாரணி (பட்டு), பூலோகரஞ்சிதம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரவீணா, கௌசிகா, திவ்வியா, மேனகா, விசாகன், சியாமளன், மைத்திரேஜி, கஜகர்ணன், விதூசன், நிதூசன், சௌமியா ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி இளையதம்பி, மனோன்மணி (கனடா) அவர்களின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சு.சிவானந்தன்
(சகோதரன்)

V.H. லேன்,
இருபாலை,
கோப்பாய்.

(2033)




# புலம் பெயர்ந்த நிலையிலும்கூட தமிழர் சமய விழுமியங்களைப் பின்பற்றுகின்றனர்

## மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க. குணராஜா

யாழ்ப்பாணம் —

எமது தாயக பிரதேசங்களை விட புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற மக்கள் இந்து சமயத்தின் பாரம்பரிய விழுமியங்களை அதிகமாகப் பின்பற்றுகின்றனர் என யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க. குணராசா தெரிவித்தார்.

அண்மையில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற நல்லைக்குமரன் 13ஆவது நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

இன்றைய நவீன காலத்தில் விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் வேகத்திலும் கூட- புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற இந்து மக்கள் இந்துப் பண்பாட்டின் அடையாளங்களைத் தொடர்ந்தும் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் எமது சமயத்தின் மீது கொண்ட நம்பிக்கையே அதற்குக் காரணமாகும்.

இன்று யாழ்ப்பாணத்தில் பல நூல்கள் வெளியீடு செய்யப்படுகின்றன. அந்த நூல்களை எவ்வளவு பேர் வாசிக்கிறார்கள் எனப் பார்த்தால், சொற்ப அளவினரே நூல்களை வாசிக்கும் பழக்கம் கொண்டிருக்கிறார்கள். இங்கு வெளியீடு செய்யப்படுகின்ற நூல்களிலும் பார்க்கப் புலம் பெயர்ந்து வாழ்கின்ற எமது மக்கள் அதிகமான நூல்களை வெளியிடுகின்றனர். அங்கு அதிகமான நூல்கள் வெளியீடு செய்யப்படுகின்ற போதும், நூல்களை வாசிப்பவர்களின் தொகையும் அதிகமாகக் காணப்படுகின்றது.

குடாநாட்டைப் பொறுத்தவரை நூல்களை வாசிப்பவர்களின் தொகை தொடர்ச்சியாகக் குறைந்து கொண்டே செல்கின்றது. நூல்களை வாசிக்கும் பழக்கத்தை எல்லோரும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் தான் நாம் பூரண அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

யாழ்ப்பாண கலாசாரம் கந்த புராணக் கலாசாரம் என்று சொல்லப்பட்டு வருகிறது. இன்று யாழ்ப்பாணத்தில் எத்தனையோ பேருக்கு கந்தபுராணம் என்பது என்னவென்று தெரியாது வாழ்கின்ற சூழலாக மாறிக் கொண்டு செல்கிறது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கந்தபுராண கலாசாரம் என்று சொல்லப்பட்டு வருகின்ற போதும் அந்த கலாசாரத்தைப் இளையோர் பின்பற்றுகிறார்களா? என்பது கவலைக்குரிய விடயம் என அவர் மேலும் கூறினார்.

# விழிப்புக்குழுக்கள் அமைக்க ஆலோசனை

பருத்தித்துறை —

பருத்தித்துறைப் பகுதியில் அதிகரித்து வரும் திருட்டுக்களையும், அசம்பாவிதச் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்த கிராமசேவகர் பிரிவு ரீதியாக விழிப்புக்குழுக்களை அமைக்கலாமென பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

கிராமசேவகர் பிரிவு ரீதியாக விழிப்புக்குழுக்களை அமைப்பதன் மூலம் பொதுமக்கள் தமது உயிரையும், உடைமைகளையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

எனவே இவ்விழிப்புக்குழுக்களை அமைக்கும் போது கிராம சேவகர் ஊடாக பிரதேச செயலகத்தின் அனுமதி பெறுவதோடு அந்தப் பிரதேச பொலிஸ் நிலையத்துக்கும் தெரியப்படுத்த வேண்டும். இதன் மூலம் ஒழுங்கான கட்டமைப்புடன் விழிப்புக்குழுக்களை ஆரம்பிக்க முடியும்.

விழிப்புக் குழுக்களை அமைப்பதற்கு தேவையான சகல உதவிகளையும் பருத்தித்துறைப் பிரதேச செயலகம் வழங்குமென அவர் மேலும் தெரிவித்தார்.(14)

# யாழ். வடபிரதேச காரியாலயத்தின் கீழ் மின்சாரக் கட்டண நடைமுறைகள்

யாழ்ப்பாணம் —

வடமாகாணத்தில் உள்ள சகல மின் பாவனையாளர்களினதும் மின்சாரக் கட்டணம் செலுத்தும் நடைமுறைகள் யாவற்றையும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் வடபிரதேச காரியாலயமே மேற்கொள்ளவுள்ளதாகச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை காலமும் மின் பாவனையாளர்கள், வங்கிகள் மற்றும் தபாலங்களில் செலுத்தும் மின் கட்டணம் தொடர்பான கணக்குகள் நேரடியாக இலங்கை மின்சாரசபையின் கொழும்பு தலைமையகத்துக்கே செல்கின்றன. மின் பாவனையாளர்கள் செலுத்திய மின்கட்டணம் தொடர்பான விபரங்கள் மூன்று மாத கால தாமதத்துக்குப் பின்னரே யாழ். பிரதேச காரியாலயத்துக்கு கிடைக்கின்றன.

இந்த காலதாமதத்தைத் தவிர்க்கும் நோக்குடனேயே இலங்கை மின்சாரசபையின் வடபிராந்தியக் காரியாலயம் மின்கட்டணம் தொடர்பான நடைமுறைகளை மேற் கொள்ளவுள்ளது.

இதன்படி வடமாகாணத்தில் சகல வங்கிகள் மற்றும் தபாலகங்களில் பாவனையாளர்களால் செலுத்தப்படும் மின்கட்டணங்களின் விபரங்கள் யாவும் ஒரு மாதத்துக்குள் யாழ். பிரதேச காரியாலயத்துக்குக் கிடைக்கப்பெறும். இதன் மூலம் காலதாமதம் தவிர்க்கப்படும் என்று கூறப்படுகிறது.

இந்த நடவடிக்கைகளுக்கென யாழ். வடபிரதேச காரியாலயம் கணினி மயப்படுத்தப்பட்டு, விரைவில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் மின்சாரசபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# மட்டக்களப்பு கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் குடாநாட்டுக்கு விஜயம்

யாழ்ப்பாணம் —

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கடற்தொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த 40 பிர

விளக்கமளித்தார்.

கடற்தொழிலாளர் சங்கங்கள் ஒன்றிணைந்து சமாசம் ஒன்றை உருவாக்கி, அதன்மூலம்

இதற்குப் பதிலளித்த மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதிகள், வடமராட்சி வடக்கு சமாச கட்டமைப்பைப் பாராட்டியதோடு,

# மனித உரிமைகள் குறித்த பயிற்சி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் —

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தால் மனித உரிமைகள் மற்றும் பொது நிர்வாக ஆணைக்குழுவின் செயற்பாடு மற்றும் அதன் அதிகாரங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதான வீதி யாழ்ப்பாணத்

வகுப்புகளில், யாழ். மாவட்ட கூட்டுறவு முகாமைத்துவ அபிவிருத்தி சபையால் நடத்தப்படும் சிறப்பு முகாமைத்துவ மாணவர்கள் பங்குபற்றுகிறார்கள்.

பயிற்சி வகுப்புகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்

யாழ்ப்பாணம் ———

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கடற்தொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த 40 பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்று மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டம், சேவாலங்கா ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்களால் இந்தப் பிரதிநிதிகள் அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் வடமராட்சி வடக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்துக்குச் சென்று, சமாசத்தின் கட்டமைப்புகளையும், செயற்பாடுகளையும் பார்வையிட்டனர்.

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சமாசத்துக்கு வருகை தந்த இவர்களை சமாசச் செயலாளர் க.சூரியகுமாரன் வரவேற்று தமது சமாசத்தின் கட்டமைப்புக்கள், செயற்பாடுகள் பற்றி விளக்கமளித்தார்.

கடற்தொழிலாளர் சங்கங்கள் ஒன்றிணைந்து சமாசம் ஒன்றை உருவாக்கி, அதன்மூலம் மாவட்ட கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஒருமித்த தீர்வு மற்றும் கடற்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றல் போன்ற செயற்பாடுகள் பற்றி தெரிவித்து - மட்டக்களப்பு மாவட்டத்திலும் இவ்வாறான கடற்தொழிலாளர் சமாசம் ஒன்றை உருவாக்கலாமென்று ஆலோசனை கூறினார்.

இதற்குப் பதிலளித்த மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதிகள், வடமராட்சி வடக்கு சமாச கட்டமைப்பைப் பாராட்டியதோடு, தமது மாவட்டத்திலும் இவ்வாறான சமாசம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தனர். (14)

மனித உரிமைகள் மற்றும் பொது நிர்வாக ஆணைக்குழுவின் செயற்பாடு மற்றும் அதன் அதிகாரங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ்.மாவட்ட விவசாய நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் நடைபெற்றுவரும் இந்தப் பயிற்சி

படும் சிறப்பு முகாமைத்துவ மாணவர்கள் பங்குபற்றுகிறார்கள்.

பயிற்சி வகுப்புகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் றோகித பிரியதர்ஷன மற்றும் ஆணைக் குழுவின் விசாரணை அதிகாரி சுவேந்திரராஜா ஆகியோர் நடத்தி வருகின்றனர்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை பத்து



பெயர் : அ.டனி தர்மிகா

முகவரி : உடுப்பிட்டி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :-----------

முகவரி :-----------

பிறந்த ஆண்டு :-----------

கூப்பன்களும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------

பெற்றோர் ஒப்பம்


## மருந்து விசிறி விட்டு துணிகரத் திருட்டு

கொக்குவில் ———

சமீபத்தில் புதிதாக வாங்கிய வீட்டில் குடி புகுந்த குடும்பம் ஆழ்ந்த நித்திரையில் இருந்த போது, ஜன்னல் வழியாக நுழைந்த திருடர்கள் அவர்களுக்குத் தூக்கம் கலையாத மருந்தை விசிறி துணிகரத் திருட்டை நடத்திச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 1 மணியளவில் குருநகர் மவுண்கார் மல் வீதியிலுள்ள மனவல் சூசைதாசன் என்பவரது வீட்டிலேயே நடைபெற்றது.

நகைகள், ரொக்கப் பணம் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள், பாஸ் போட், விமானச் சீட்டு, மின்சாரப் பொருட்கள் என, பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளன.

இது குறித்து அவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (206)

# கொடிகாமம் - அச்சுவேலி பகுதிகளில் பிரதேச செயலகம் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் ———

கொடிகாமம் மற்றும் அச்சுவேலி பகுதிகளில் புதிய பிரதேச செயலகங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

இந்தப் புதிய பிரதேச செயலகங்கள் அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று அது சம்பந்தமான அறிக்கை பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கொடிகாம பிரதேசம், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவின் கீழ் இருப்பதாலும் சாவகச்சேரி பிரதேச செயலகம் 60 கிராம சேவகர் பிரிவை உள்ளடக்கி அதிக சனத்தொகை கொண்டு விளங்குவதாலும் கொடிகாம பிரதேச மக்கள் தமது தேவைகளுக்காக சாவகச்சேரி பிரதேச செயலகத்தையே நாடுகின்றனர். இதனால் இந்தப் பகுதி மக்கள் பல சிரமங்களுக்கு உள்ளாகுவதால், கொடிகாமத்துக்கு தனியான பிரதேச செயலகம் அமைக்கப்படவேண்டும் என பலராலும் கோரிக்கை விடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று வலி.கிழக்கில் கோப்பாய் பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் அச்சுவேலிக்கு தனியான பிரதேச செயலகம் அமைக்கப்படவேண்டும் என கோரிக்கை விடப்பட்டு வந்ததாகவும் கூறினார்.

## புனித மிஃறாஜ் இரவு

மிஃறாஜ் இரவை முன்னிட்டு நேற்று முன்தினம் யாழ்.பெரிய முகைதீன் ஜும்மாப் பள்ளிவாசலில் விசேட பிரார்த்தனை நிகழ்வு நடைபெற்றது.

மானிப்பாய் வீதியிலுள்ள நம்பிக்கையாளர் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மிஃறாஜ் நிகழ்ச்சியில் இஷா தொழுகையை அடுத்து பேஸ் இமாம் அல்ஹாஜ் பாஷா முகதீனின் பிரார்த்தனையும் இடம் பெற்றது.




தமிழ் ஊடகவியலாளர் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும், தொடரப்படுகின்ற வன்முறைகளை கண்டித்து குடாநாட்டு ஊடகவியலாளர்கள் நேற்று யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் நடத்திய அடையாள எதிர்ப்புப் போராட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்

## சிநேகிதியே



# அழகுக்கலையைப் பொறுத்தவரையில் பெண்கள் நிறைய முன்னேறவேண்டும்

**இன்றைய நவீனயுகத்தில் கலை களின் வளர்ச்சி மிகவும் ஓங்கி வளர்ந்துள்ளது. இந்தக் கலைகளில் பல வகையுண்டு. அவற்றில் அழகுக்கலை, சித்திரக்கலை குறிப்பிடத்தக்கவை ஆகும். இந்தக் கலைகளை இந்தியாவுக்குச் சென்று, 6 மாத காலத்தில் பயின்று வந்துள்ள 405 கோவில் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாம்பவி நிரஞ்சன் என்பவருடனான நேர்காணல் -**

இந்தியாவில் செயல்முறைக்கு முக்கியத்தும் அளிக்கப்படுவதுடன், அவற்றில் நாம் திறமையாகச் செயற்படுவதற்கு எமக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அத்துடன் ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனித்தனி அக்கறை காட்டப்படுகிறது. அது மட்டுமன்றி - அழகுக்கலையில் நவீனயுக்திகளையும், நவீன உபகரணங்களையும் எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் பயிற்றுவிக்கப்படுகிறது. அத்துடன் அழகுக்கலையின் நுணுக்கங்களும் கற்பிக்கப்படுகின்றன.

அழகுக்கலை என்பது பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம் அழகு என்பது எல்லோரிடமும் உண்டு. அதனைப் பாராமரிப்பதும், மெருகூட்டுவதும் அனைவரும் அறிந்திருக்க வேண்டிய விடம். ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு அழகு இருப்பதை வெளிப்படுத்துவதே அழகின் சிறப்பம்சமாகும். அழகுபடுத்தல் என்பது இன்றைய பெண்களிடையே பிரபல்யமான ஒரு கலையாகும். அதுமட்டுமன்றி அனைத்துப் பெண்களும் அறிய வேண்டிய முக்கியகலைலயாகவும் விளங்குகிறது.

இந்தக் கலையைப் பயில்பவர்கள் எங்கு சென்றாலும் அது அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். அதுமட்டுமன்றி - திறன் மிக்க வேலைவாய்ப்பையும் பெறமுடியும். பெண்கள் தன்னம்பிக்கை கொண்டவர்களாக வளர்ந்துவரும் இந்த நாளில், எந்தவொரு பெண்ணும் ஏதாவது ஒரு தொழில் தெரிந்திருப்பது முக்கியமாகும். அழகுக்கலை எங்கும், எப்போதும் பயன்படும் ஒன்றாகும். இந்தக் கலை வெளிநாடுகளில் அதிகமுக்கியத்வதும் உள்ளதாகவும், இலாபகரமான தொழிலாகவும் விளங்குகிறது. அழகுபடுத்தல் ஆத்மார்த்தமாகச் செய்யப்படல் வேண்டும். மன ஒருமைப்பட்டுடனும், ஈடுபாட்டுடனும் செய்யப்படும் இந்தக் கலை சிறப்பாக அமையும் என்பது திண்ணம்.

இனிவரும் காலங்களில் அழகுக்கலை பிரதானமாக விளங்கும் என்பது உண்மை. இலங்கையைப் பொறுத்தவரை அழகுக்கலை நிறைய முன்னேற வேண்டியுள்ளது. அதாவது - இந்தக் கலை கற்பித்தல் முறையில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். எழுத்து மூலம் அறியவேண்டியதல்ல; செயற்பாடு மூலமும், அனுபவம் மூலமும் பெறவேண்டிய ஒன்று. எவ்வளவு செய்முறை செய்கிறாரே அவ்வளவு நன்மையுண்டு.







அழகுக் கலையைப் பொறுத்தவரையில் தோல் பராமரிப்பு, முடி பராமரிப்பு கைகளுக்கு மருதாணியிடல், சேலை அணியும் முறைகள்என வகைப்படுத்திக் கற்பிக்கப்படுகிறது.

சித்திரக் கலையில் வித்தியாசமான ஒரு கலை பெயின்ரிங். இந்தப் பெயின்ரிங்கில் கண்ணாடிப் பெயின்ரிங், சாறி பெயின்ரிங், மட்பாண்டப் பொருட்கள் பெயின்ரிங், மணலில் செய்யப்படும் பெயின்ரிங் எனப் பலவகைப்பட்ட பெயின்ரிங் முறைகள் உண்டு. இவ்வாறான பெயின்ரிங்குகளுக்கு வரையத் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. நன்றாக வரைந்தால் தான், பெயின்ற் பண்ண முடியும் என்று இல்லாது, இலகுவான முறையில் இக்கலையை யாரும் கற்றும் கொள்ளளலாம்.

இவ்வாறான அழகுக்கலை, சித்திரக் கலை, பெயின்ரிங் வகைகள் மட்டு மன்றி மணப்பெண் அலங்காரங்களும், புடவையில் மேற்க்கொள்ளப்படும் தையல் வேலைப்பாடுகளும் இதில் அடங்கும். மருதாணியிடுவது எவ்வாறு, மருதாணி கலப்பது எவ்வாறு, அதனை எவ்விதம் போடுவது என்பது பற்றியும் விதவிதமான வடிவங்களில் கற்றுக் கொடுக்கிறேன்.

அனைத்து பெயின்ரிங்கும் தனித்தனியாகவே கற்றுக்கொடுக்கிறேன். இவை அனைத்தும் பெண்கள் தெரிந்திருக்க வேண்டிய கலைகளாகும்.

இவ்வாறான கலைகளைக் கற்றுக் கொள்வதற்கு பெற்றோரினதும், கணவரினதும் ஊக்கத்தாலும், முயற்சியினாலும் தான் இவற் றைக் கற்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டவளாக இருப்பேன். இத்துடன் உறவினர்களின் ஒத்துழைப்பும் முக்கியமான காரணமாகும். அவ்வாறு நான் கற்ற கலைகளை எனது மண்ணில் பரப்பி, மாணவர்கள் கற்க அரிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளேன் என அவர் கூறி முடித்தார்.

படுகிறது. அத்துடன் ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனித்தனி அக்கறை காட்டப்படுகிறது. அது மட்டுமன்றி - அழகுக்கலையில் நவீனயுக்



திகளையும், நவீன உபகரணங்களையும் எவ்வாறு பயன்படுத்துவது

கவும் விளங்குகிறது.

இந்தக் கலையைப் பயில்பவர்கள் எங்கு சென்றாலும் அது அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். அதுமட்டுமன்றி - திறன் மிக்க வேலைவாய்ப்பை



ளவு செய்முறை செய்கிறாரே அவ்வளவு நன்மையுண்டு.

அழகுக் கலையைப் பொறுத்தவரையில் தோல் பராமரிப்பு, முடி பராமரிப்பு கைகளுக்கு மருதாணியிடல், சேலை அணியும் முறைகள்என வகைப்படுத்திக் கற்பிக்கப்படுகிறது.


சித்திரக் கலையில் வித்தியாசமான ஒரு கலை பெயின்ரிங். இந்தப் பெயின்

மருதாணியிடுவது எவ்வாறு, மருதாணி கலப்பது எவ்வாறு, அதனை எவ்விதம் போடுவது என்பது பற்றியும் விதவிதமான வடிவங்களில் கற்றுக் கொடுக்கிறேன்.

அனைத்து பெயின்ரிங்கும் தனித்தனியாகவே கற்றுக்கொடுக்கிறேன். இவை அனைத்தும் பெண்கள் தெரிந்திருக்க வேண்டிய கலைகளாகும்.

இவ்வாறான கலைகளைக் கற்றுக்கொள்வதற்கு பெற்றோரினதும், கணவரினதும் ஊக்கத்தாலும், முயற்சியினாலும் தான் இவற்றைக் கற்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டவளாக இருப்பேன். இத்துடன் உறவினர்களின் ஒத்துழைப்பும் முக்கியமான காரணமாகும். அவ்வாறு நான் கற்ற கலைகளை எனது மண்ணில் பரப்பி, மாணவர்கள் கற்க அரிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளேன் என அவர் கூறி முடித்தார்.

# பெண் ஏன் அடக்கப்பட்டாள் ஏன் ஒடுக்கப்பட்டாள்...?



குழந்தை பிறந்திருக்கும் சமயங்களில் பெண்களில் குருதி வாடையும், பால் வாடையும் இருக்கும். அதே போல மாதா மாதம் வெளியேறும் சூல் முட்டைகளின் காரணமாகவும் பெண்களில் அந்த நாட்களில் குருதி வாடை இருக்கும். இந்த வாடையை முகர்ந்தறிந்து மனிதர்களின் இருப்பிடத்தையோ அல்லது வரவையோ அறிந்து கொள்ளும் திறன் விலங்குகளுக்கு உண்டு.

ஆரம்பத்தில் பெண்கள், ஆண்கள் என்று எல்லோரும் ஒன்றாகச் சென்று வேட்டையாடி, ஒன்றாக உண்டு, போற போற இடங்களிலேயே குழந்தைகளைப் பெற்றெடுத்துத்தான் வாழ்ந்தார்கள். ஆனால், எவ்வளவு பாதுகாப்பாக ஒழிந்திருந்தும் எப்படி விலங்குகள் தம்மைக் கண்டு பிடித்து அழிக்கின்றன என்ற ஆராய்ச்சியை அவர்கள் மேற்கொண்ட போது தான் இந்தக் குருதி வாடையை வைத்து விலங்குகள் தம்மை மோப்பம் பிடிப்பதை அறிந்து கொண்டார் கள்.

அதன் பிறகு தான் அந்தக் குறிப் பிட்ட நாட்களில் பருவமெய்திய பெண்களையும், குழந்தை பெற்ற பெண்களையும் வீட்டிலே விட்டு மோப்பம் பிடித்து வரக் கூடிய விலங்குகளால் அவர்களுக்கு எந்த வித ஆபத்துக்களும் ஏற்படா வண் ணம் காவலும் வைத்து விட்டு, மற்றவர்கள் வேட்டைக்குச் சென்றார்கள்.

இது மனிதர்கள் மத்தியில் மட்டுமல்ல, விலங்குகளிடமும் இருந்தது. மிக ஆதி காலத்திலிருந்தே தம்மைவிடப் பலமான விலங்குகளிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ள குட்டி போட்ட பெண் விலங்குகளைத் தமது இருப் பிடங்களில் விட்டுப்போக வேண்டிய கட்டாயம் விலங்குகளுக்கும் இருந்தது.

இந்த விலங்குகளிடமிருந்தான பாதுகாப்புத் தேடல்தான், மெதுமெதுவாக பெண்கள் வீட்டுக்குள் முடங்க வேண்டிய தொரு நிலைப்பாட்டை ஏற்படுத்தத் தொடங்கியது.

காலங்காலமாக இந்த நடைமுறை தொடர்ந்த போது - நாட்டின் சீதோஸ்ண நிலைக் கேற்ப எப்படி தோல் இசைவாக்கம் பெற்றதோ அதேபோல மூளையும் மெதுமெதுவாக இசைவாக்கம் பெறத் தொடங்கியது.

ஆண்களின் மூளை வேட்டைக்குப் போகும் பாதையை நினைவுபடுத்தி வைப்பதிலும், வேட்டையாடுவதிலும்... என்று ஒரு விதமான ஒற்றைப் பாதையில் திடமாக, கூர்மையான அவதானத்துடன் நின்றபோது, பெண்களின் மூளையோ தமது குழந்தைகளைப் பாதுகாப்பதிலும், குடும்பத்தின் உள் விடயங்களைக் கவனிப்பதிலும்... என்று சற்றுப்பரந்து விரிந்தது.

இங்கே பாதுகாக்கும் தன்மை என்பது ஆண்களால் வெறுமனே ஒருவரை காவலுக்கு விடுவதுடன் நின்றுவிட்டது. ஆனால், பெண்களிடமோ தம்மைத் தாமே பாதுகாப்பது மட்டுமன்றி, மிகமிக அவதானத்துடன் எந்த விலங்கிடமும் தமது குழந்தையும் பறி போய் விடாதபடி தாமே பாதுகாக்கும் தன்மையும், தம்மை அண்டியுள்ள மற்றைய பெண்களுக்கும், அவர்கள் குழந்தைகளுக்கும் ஆபத்து ஏற்படாதபடி பாதுகாப்புக் கொடுக்கும் தன்மையும் இருந்தது. அதுவே அவர்களி டம் ஒரு குழுமமாகச் செயற்படும் தன் மையை ஏற்படுத்தியது. இதுவே மனிதன் விலங்குகளிலிருந்து தன்னை வேறு வழிகளில் காப்பாற்றிக் கொள்ளக் கூடிய நிலை வந்தபின்னும் தொடர்ந்தது. தொடர்ந்து கொண்டுமிருக்கிறது.

மாதவிலக்கு என்று சொல்லி பெண் ணைத் தனியாகப் பாதுகாப்பாக விடுவதற்கும், மாதவிலக்கு நாட்களில் பெண் தனியே வெளியே போனால் பேய் பிடிக்கும் என்று சொன்னதற்குமான அடிப்படைக் காரணிகள் இவையே.

அங்கே பிடிக்கப்போவது பேயல்ல, விலங்கு கள். ஆதிகாலத்தில் - அந்த நேரத்தில் விலங்குகளிடமிருந்து பெண்கள் தம்மைப் பாது காத்துக் கொள்வதற்காகவே பெண்களிடம் ஒரு பெரிய இரும்பைக் கொடுத்து வைத்தார்கள். இங்கே இரும்பு ஒரு தற்பாதுகாப்பு ஆயுதமாகவே இருந்தது. சில இடங்களில் உலக்கையையும் கொடுத்தார்கள்.

இன்று மாதவிலக்கான பெண்களைத் தேடிவரும் தொலைவில் விலங்குகளே இல்லை. மிருகக்காட்சிச் சாலையில் விலங்குகளை அடைத்துக் காட்சிக்கு வைக்கும் அளவுக்கு அவைகளை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்து விட்டு வாழ்கிறோம். இந்த நிலையில் ஏன், எதற்கு என்ற சிந்தனைகள் எதுவுமின்றி, இன்றும் இப்படியான அர்த்த மற்ற செயற்பாடுகள் தொடர வேண்டிய அவசியமில்லை.

ஏட்டில் எழுதிய நாம் இன்று கணினியில் எழுதுகிறோம். புறாவைத் தூது விட்ட நாம் மின்னஞ்சலில் அசத்துகிறோம். பெண்ணை மட்டும் அடங்கு என்று சொல்ல இன்னும் என்ன நாம் காட்டிலா வாழ்கிறோம். அல்லது எம்மைச் சுற்றி விலங்குகளா நட மாடுகின்றன. காட்டு வாழ்க்கையை விட்டு, நாட்டில் வீடு கட்டி பாதுகாப்பாக வாழும் நிலைக்கு நாம் என் றைக்கோ வந்து விட்டோம்.

இருந்தும் மூளையில் பதியப் பட்ட அடிப்படையான ஆதிகாலப் பிரச்சினையைக் கருத்திற் கூடக்கொள்ளாமல், இன்னும் பெண்கள் வீட்டுக்குள் ஒடுங்க வேண்டியவர்கள் தான் எனக் கண்மூடித்தனமாகக் கருதுகிறோம். அன்று சூழ்நிலை கருதி, பாதுகாப்புக்கருதி குழந்தை பெற்ற பெண்கள்....வீட்டினுள் தங்கினார்கள் என்றால், இன்று அந்த எந் தக் காரணங்களும் இல்லாமலே பெண்கள் வீட்டுக்குள் அடங்க வேண்டுமென நினைக்கிறோம்.

# சுனாமி - ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

## (22 ஆம் அத்தியாயம்)

திருவிழாக் கூட்டம் அலைமோதியது. வருடத்துக்கு ஒருமுறை வரும் திழுவிழா! ஊர் முழுவதும் கொண்டாடும் விழா! கொடியேற்றம் தொடங்கி 10 நாட்களும் ஒரே ஆரவாரம் தான். என்னோடொத்த இளசுகள் எல்லாம் அலங்காரம் செய்து,



பவனிவரும். மாலையில் சுவாமி வெளி வீதி ஊர்வலம் நடக்கும். எல்லா இளசுகளும் ஊர்வலத்தோடு சேர்ந்து சுற்றும். இந்தமுறை எனக்கும் திருவிழாவுக்குப் போவது விசேடமாக இருந்தது. கடந்த ஒரு மாதத்தில் நான் நன்றாக மாறிவிட்டேன். எங்கள் கடையும் விசாலமாகி விட்டது. இளநீர் வியாபாரம் இப்போது இல்லை! ஆனால், குளிர்பானம் நிறைய விற்பனையாகிறது! அன்றைக்கு இளநி குடிக்க வந்தவர் இப்ப எங்கள் நெருங்கிய நண்பராகிவிட்டார். எங்கள் கடையில் வெளிநாட்டுப் பொருட்களைக் கொண்டு வந்து, வியாபாரத்தைப் பெருகச் செய்து விட்டார்.

அப்பிளும், தோடம்பழமும், பிஸ்கற்றும், சொக்ளேற்றும் எல்லோரையும் கவர்ந்தன. அவர் எங்கே வேலை செய்கிறார் என்பதை நான் கேட்கவில்லை. ஆனால், என் ஆசைகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை என்னுள்ளே வளர்ந்து விட்டது. வீட்டுத் தென்னை மரத்தில் இளநி முடிய என்ன செய்யலாம் என நாங்கள் எண்ணிக்கொண்டிருந்த போது, அவரே நல்ல யோசனை சொன்னார்!

"நான் ஒவ்வொரு கிழமையும் இதாலை வேலைக்குப் போறனான்! வாகனத்திலை வியாபாரத்துக்குச் சாமான் கொண்டு வந்து தாறன்!"

அம்மம்மா அதை அவ்வளவாக விரும்பவில்லை. ஆனால், வயிற்றுப்பாட்டுக்குக் கடை நடத்த வேணும் என்பதால் அரை மனதோடு சம்மதித்தாள். அடுத்த சனிக்கிழமை மதியநேரம் நான் கிணற்றடியில் முழுகிவிட்டுத் தலையை உலர்த்திக் கொண்டிருந்தேன்! வாகனம் வந்து நின்ற சத்தம் கேட்டது. கிணற்றடி தகர அடைப்பால் எட்டிப் பார்த்தேன்! அவர்தான் வந்திருந்தார். அம்மம்மா சத்தம் கேட்டு, சமையலறையிலிருந்து வெளியே வந்தாள். அடுப்பில் நண்டுக்குழம்பு கொதித்துக்கொண்டிருந்தது. அதன் மணம் எங்கள் தகரவீடு முழுவதும் வீசியது.

"பிள்ளை! பிள்ளை!"

அம்மம்மா குரல் கொடுக்க, நான் அவசரமாகச் சேலையைச் சுற்றிக்கொண்டு ஓடினேன். அப்போது அப்பிள் பழங்களோடு வந்த அவர் மீது மோதி... பெட்டியோடு பழங்கள் கீழே விழுந்து உருள, நான் நிலை தடுமாற... சட்டென அவர் என்னைத் தாங்கிக்கொள்ள நான் திமிறிக் கொண்டு ஓடினேன்!...

இப்போது நிலைமை வேறு! அவர் அடிக்கடி வீட்டுக்கு வருவார். நான் அவருக்கு மீன் குழம்போடு சோறு பரிமாறுவேன். ரசித்துச் சாப்பிடுவார்.

"நீ வைக்கிறது ஒரு கறியெண்டாலும் நல்ல ருசி!"

அவருடைய பாராட்டில் நான் மயங்கினேன்! பிறகென்ன!... அவரையே என் வருங்காலக் கணவராகக் கற்பனை செய்து வாழத்தொடங்கினேன்.

"பிள்ளை உந்த ஆளை நம்ப ஏலாது!... வயதும் கூடவாக் கிடக்கு! கொஞ்சம் கவனமா இரு மோனை!"

"இல்லை! அம்மம்மா அவர் நல்லவர்!"

"உனக்கு அனுபவம் போதாது! சோக்காத் திரியிறவன் நிலைச்சு நிக்கமாட்டான்! சேறு கண்ட இடத்திலை மிதிச்சு, தண்ணி கண்ட இடத்திலை கழுவிப் போட்டுப் போடுவான்!"

அம்மம்மாவின் அறிவுரை இளமையின் வாசலில் நின்ற என் காதில் ஏறவில்லை. நானும் அவரை நம்பினேன்!... விளைவு இரு குழந்தைகள்!... அம்மம்மா எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டாள். அவர் ஒரு வந்துபோகும் கணவராக... இருப்பதை அவளால் தடுக்கமுடியவில்லை! ஆனால் அவள் மனதில் அது நோயாக, படுக்கையில் விழுந்தாள்! ஒரு வாரத்தில் இந்த உலக வாழ்வை முடித்துக்கொண்டாள். நான் தனித்துப் போனேன்! இரண்டு குழந்தைகள்!... வாரம் இருமுறை வந்துபோகும்... பிரியன்... ஊர் சும்மா இருக்குமா! என் காதுபடவே வசைபாடியது! அவரோ உறுதியாக வந்துபோனார். எல்லாச் செலவையும் எற்றார்!

"அப்பா!.. நீங்கள் ஏன் அடிக்கடி வேலைக்குப் போகிறீர்கள்?"

பையன் கேட்பான்!

"இப்ப உழைச்சால் தான், உங்களுக்குப் ஒரு புதிய வீடு கட்டலாம்!"

அவர் சொல்லும்போது நான் இடைமறித்தேன்!

"எங்கை கட்டித்தரப் போறியள்! எல்லாம் புளுகுதான்!"

"இல்லை! உண்மையா நான் N.C ரோட்டிலை ஒரு வீடு கட்டிப்போட்டன்!"

"ஏன் அங்கை கட்டவேணும்? இந்தத் தகரவீட்டைப் பெரிய கல்வீடாக் கட்டலாம் தானே!"

"பிள்ளையள் படிக்கிறதுக்கு அங்கே போறது தான் நல்லது!"

"அது சரி! உறுதி முடிச்சுத் தந் தால் தான் நான் நம்புவன்! எனக்கு நாளைக்கு உறுதியைக் கொண்டு வந்து தாருங்கோ!"

என் பேச்சில் இருந்த கடுமை அவரை விரட்டியது. அன்றிரவு நான் பிள்ளைகளுடன் படுத்து விட்டேன். அவர் ஓரிரு தடவை கூப்பிட்டார். நான் அசையவே இல்லை!... விடிந்ததும் காரில் புறப்பட்டார். நான் வழியனுப்பப் போகவே இல்லை! பிள்ளையள் இரண்டும் வழியனுப்பிவைத்தன!...

மூன்றாம் நாள் அவர் வந்தபோது உறுதியோடு வந்தார்.

கல்வீடும், 2 பரப்புக் காணியும் என் பேருக்கு எழுதப்பட்டிருந்தன. எனக்கு மிகுந்த மகிழ்ச்சி!... பார்த்து விட்டுக் கேட்டேன்!

"அப்ப... எப்ப புதுவீட்டுக்குப் போகப் போறம்!..."

ஆர்வமாகக் கேட்டேன்!

"இன்னும் கொஞ்சக்காலம் போகட்டும்! வீட்டு வேலையும் முடியவேணும்!"

"கெதியா முடிஞ்சுதெண்டால் நல்லது! நாங்களும் ஒண்டா இருக்கலாம்! இப்படிக் கிழமையிலை ஒரு நாள் வந்து போற அலைச்சலும் உங்களுக்கு இருக்காது!"

"இது என்ன பெரிய அலைச்சல்! காறிலைதானே வாறன்!"

அவர் சொன்னபோது என் மனம் நிறைந்தது.

"அப்பா இண்டைக்குத் திருவிழாவுக்குக் கூட்டிக்கொண்டு போங்கோ!... எல்லாரும் போகினம்!..."

"அப்பன் இண்டைக்கு எனக்கு நிறைய வேலை இருக்கு! கொடியேற்றம் இண்டைக்குத்தானே!... வாழகிழமை போவம்!"

அவர் சொன்னபோது அவன் ஏற்றுக்கொண்டான்! ஆனால், நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. என் உள்ளத்தில் அம்மம்மா நெடுகலும் சொன்ன விடயம் நினைவுக்கு வந்தது. பட்டென்று அவரிடம் கேட்டு விட்டேன்!

"கலியாணம் எழுதாமல் இன்னும் எவ்வளவு காலம் இப்பிடி இருக்கிறது? அதுக்கும் ஒரு ஒழுங்கு செய்யுங்கோ!..."

திடீரென அவருடைய முகம் விகாரமாகிவிட்டது!

"என்ன!... திகைச்சுப் போனியள்! எனக்கும் பின்னுக்கு ஒருபிடி வேணும்! பிள்ளையளும் ஒழுங்கானவை. எண்ட பேரெடுக்கவேணும்!..."

நான் சொல்லச் சொல்ல அவர் முகம் வேதனையால் நிறைய ஆரம்பித்தது. எனக்கும் கொஞ்சம் கோபம் வந்தது!...

"என்ன ஒண்டும் பேசாமல் இருக்கிறியள்!"

அவர் சொன்னார்!

"இப்ப உடனடியாக் கலியாணம் எழுத ஏலாது. கொஞ்சநாள் கழிய எழுதலாம்!"

"பிள்ளையளின்ரை பேருக்கு முன்னாலை உங்கடை பேரைப் போடவேணும்!"

"அதெல்லாம் நான் ஒழுங்காக் கித்தாறன்! நான் என்ன உன்னைக் கைவிட்டுவன்எண்டு பயப்பிடுகிறியே!"

அவர் குரலில் இருந்த அன்பு என்னை வசப்படுத்தியது. நான் சமாதானம் அடைந்தேன்!

"இந்தத் திருவிழாவுக்கு எல்லாரும் ஒண்டாகப் போகவேணும்!"

என் வேண்டுகோளை அவர் மறுக்கவில்லை!

திடீரென்று கேட்ட பட்டாஸ் சத்தம் என் நினைவைக் கலைத்தது. நெஞ்சில் ஒரு வலி!... என்முன்னெ நின்ற பஸ்ஸில் ஏறவேணும் போலிருந்தது. இந்தவருடம் எல்லாமே தலைகீழாய் நடக்கிறதே! என்ரை பிள்ளையளின்ரை நினைவு வர பழைய நினைவு அறுந்தது. ஓடிப் போய் பஸ்ஸில் ஏறினேன்.

"அம்மா எங்கை போகவேணும்?"

அது என் செவியில் விழவில்லை!...

"என்ன யாழ்ப்பாணமே!..."

ஒரு பழகிய குரல்!... என் செவியில் பாய்ந்தது. நிமிர்ந்து பார்த்தேன்! அந்த உருவம்!... நினைவில் பெயர் வர மறுத்தது... யாராக இருக்கும்!...

(தொடரும்...)

# அகநிலை மாற்றத்தின் அவசியம்

ஆதிலட்சுமி சிவகுமார்



(சென்றவாரத்தொடர்ச்சி....)

அவளிடம் காதலுக்குச் சான்றாய் கடிதங்கள் இருக்கின்றன. ஆனாலும், அவள் எங்கும் முறையிடவில்லை. அவள் படித்தவள், பகுத்தறிவுள்ளவள் 'உன்னை ஏமாற்றியவனை நீ சும்மா விடக்கூடாது' என்று நண்பிகள் உறவினர்கள் உருவேற்றினார்கள்.

அவளோ மறுத்துவிட்டாள்.

'நான் அவரை தூய்மையுடன் நேசிக்கிறேன். அவருக்கு என்னால ஒன்றுமே வரக்கூடாது என்று விட்டுவிட்டாள்.

இப்படியாகத்தான் பெண்கள் சிலர் நீதியின் பக்கத்திலிருந்து ஒதுங்கிக் கொள்கிறார்கள். தாம் வரித்துக் கொண்ட கொள்கைகளிலிருந்து பின்வாங்கிக் கொள்கிறார்கள்.

இதற்குக் காரணம் இந்தப் பெண்களின் அகநிலை தான் எனக் கருதலாம். ஆனால், இதில் சம்பந்தப்படும் ஆண்கள் எந்தவிதமான மன ஊறலுமற்று வாழ்கிறார்கள்.

சமூகத்தில் பெரும்பாலான பெண்கள் விழிப்புணர்வு பெற்றிருப்பதாக நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனபொழுதிலும், அடிமனங்களில் ஆணாதிக்க அடக்குமுறை மனோபாவம் மாற்றம் கொள்ளாமலேயே இருப்பதைப் பல இடங்களில் பார்க்கிறோம். ஆணாதிக்க அடக்குமுறை மனோபாவம் என்பது வெறுமனே ஆண்களிடம்தான் இருப்பதாக நாம் கருதிக்கொள்ள முடியாது. ஆரம்பகாலங்களில் மனித சமுதாயம் பெண் வழிச் சமூக அமைப்பு முறையைக் கொண்டே இருந்தது. பெண் உழைப்பாளியாகவும், கூட்டத் தலைவியாகவும், தீர்மானங்களை எடுப்பவளாகவும் இருந்தாள். பின்பு காலப்போக்கில் ஆண் உழைப்பாளியாகவும், சமூகத்தைத் தலைமை தாங்குபவனாகவும், தீர்மானங்களை எடுப்பவனாகவும் இருந்தான். ஆணாதிக்க மனோநிலை என்பது எவ்வாறு ஊறியிருக்கிறது என்பதற்கு சில உதாரணங்களூடாகப் பார்ப்போம். ஒரு வீட்டுக்கு நாலைந்து இளைஞர்கள் செல்கிறார்கள்.

'அக்கா.... எங்கட ஊரில முக்கியமா கொண்டாட வேண்டிய நாள் வருது தெரியும் தானே.... எல்லா வீடுகளுக்கும் போய் வாறம். ஏதோ உங்களால் முடிஞ்சதைத் தாங்கோ.....'

'இவரில்ல... பிறகு வாருங்கோ...'

'காசு இப்ப வேண்டாமக்கா... எவ்வளவென்று சொன்னியளெண்டா நல்லது....'

'அவரத்தான் கேக்க வேணும்..... பிறகு வாங்கோவன்...'

உழைப்பாளியான பெண்கூட இப்ப டித்தான் பல சந்த ர்ப்பங்களில் பதில் சொல்வதைப் பார்க்க முடிகிறது.

இரண்டு காத லர்கள் ஏழெட்டு வருடங்களாக நேசி ப்பவர்கள். ஒருநாள்- அவன் கேட்டான்

'நீ என்னை உண்மையாகவே நேசிக் கிறாயா?'

'ஓம்' இது பெண்.

'அப்படியானால் கிணற்றுக்குள் குதிப்பாயா?...'

'கிணற்றுக்குள் குதிப்பதா?...'

'நீ உண்மையாகத்தான் நேசிக்கிறாய் வா என்று...

கதிர் நல்லவன், நல்ல உழைப்பாளி, படித்தது குறைவு ஆனால் பண்பானவன். ஒரு நாள் காலை வேலைக்கென்று வெளிக்கிட்டால் சையிக்கிள் காற்றுப்போய் நின்றுவிட்டது. வீட்டுக்குள் போய் காற்றடிப்பதற்காகப் பம்மைத் தேடினான். காணவில்லை.

'பம் எங்கையப்பா...'

'முந்தனாள் அண்ணையின்ர பொடியன் வந்து வாங்கிக் கொண்டு போனவன்... தரேல்லை.... வாங்கிக் கொண்டு ஓடியாறன்....'

'ஆரைக் கேட்டு குடுத்தனி...'

'அண்ணையின்ர பிள்ளைதானே... கேட்டுது... என்னெண்டு வைச்சுக்கொண்டு இல்லையென்றது...'

'ஆரெண்டாலும் என்னைக் கேட்காமக் குடுக்காத... பிறகு வீண் பிரச்சினை வரும்...'

கோபத்தோடு படலையை அடித்து விட்டுப்போகும் கணவனை நீர் நிறைந்த கண்களோடு அவள் பார்த்துக் கொண் டிந்தாள்.

பெண் என்பதால் பெண் புறக்கணிக்கப்படுகின்ற பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. பெண்களிடம் அறிவிருக்கிறது. ஆற்றல் இருக்கிறது.

(தொடரும்...)

# மன்னார், வவுனியா மாவட்டங்களில் மக்களமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்வு

மன்னார்—

மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களில் பிரதேசரீதியாக நடைபெற்றுவரும் மக்களமைப்பு ஒன்று கூடல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த ஒன்று கூடல் நிகழ்வில் கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள்- ஒருமித்த குரலில், நாம் எமது சொந்தப் பலத்தில் நம்பிக்கை கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

நாம் சமூக, பொருளாதார, கலாசார, ஆன்மீகத் துறைகளில் வாழ்வுதய நிறுவனம் ஊடாக உயிர்ப்பூட்டம் பெற்று, படிப்படியாக முன்னேற்றப் பாதையில் எம்மை நகர்த்திச் செல்கிறோம். இந்த நிறுவனம் - கடந்த 23 வருடங்களுக்கு மேலாக மன்னார் ,வவுனியா போன்ற மாவட்டங்களில் தனது சமூக, பொருளாதார, கலாசார, ஆன்மீக செயற்பாடுகளைக் கடந்த போர்க்காலங்களில் மட்டும் அல்லாது இந்தக் காலத்திலும் மிகவும் சிறப்பாக அர்ப்பண நோக்குடன் மக்களை வலுவூட்டிச் செயற்படுத்திவருகிறது.

கடந்த 2000 ஆம் ஆண்டு தொடக்கம் வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய கிராமங்களை நாடி, ஊக்குவிப்பு செயற்திட்டம் என்ற பெயருடன் சில கிராமங்களில் 15 - 20 நபர்கள் அடங்கலாக ஊக்குவிப்புக் குழுக்களை அமைத்து அவர்களுக்கு சமூக, பொருள்ாதார, கலாசார, ஆன்மீகம் தொடர்பான விழிப்புணர்வை கொடுத்து, அவர்களின் சொந்த பலம் பற்றிய அறிவூட்டலை வழங்கி வந்துள்ளது.

தற்பொழுது இந்தக் குழுக்கள் மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களில் பிரதேச அமைப்புகளாகப் பிரிக்கப்பட்டு, பரவலாகக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டு ஒரிரு குழுக்களுடன் ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுது 125 குழுக்கள் அமைக்ககப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள் என்ற பெயருடன் இயங்கி வருகிறன.

இந்தக் குழுக்கள் தற்பொழுது விழிப்பூட்டம் பெற்று, தமது சொந்த பலத்தில் நம்பிக்கை கொண்டவர்களாகச் செயற்பட்டு வருகின்றன. சமூக, பொருளாதார,கலாசார,ஆன்மீகசெயற்பாடு, சமூகத்தில் ஆளுமை நிறைந்த, ஒற்றுமையுள்ள மக்கள் சக்தியாக மாற்றம் பெறுவதே இவர்களின் இலக்காக இருக்கின்றது என்றும் கூறினார்.

இந்தச் செயற்பாடுகளை மன்னார் வாழ்வுதய நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை பி.ஜேசுராஜா அடிகளாரின் திட்டமிடலுடனும், வழிகாட்டலுடனும், இணைப்பாளர் எஸ். அன்ரன் ராஜகாரியரின் ஒருங்கிணைப்புடனும், ஊக்குவிப்பாளர்களான - மன்னார் தீவு பிரதேசத்துக்கு பொறுப்பாக சி.எம். ஏ.ஜெயதாஸ், அடம்பன் பிரதேசத்துக்குப் பொறுப்பாக ஆர்.மரியதாஸ், நானாட்டான் பிரதேசத்துக்குப் பெ றுப்பாக எஸ்.பூட்டோ பெரேரா, மடுப் பிரதேசத்துக்குப் பொறுப்பாக ஏ. ஜோர்ச் குரூஸ், முசலிப் பிரதேசத்துக்குப் பொறுப்பாக எஸ். ஆர்.ராஜேஸ்வரன், வவுனியா பிரதேசத்துக்குப் பொறுப்பாக ஏ.விமலநாதன், செட்டடிக் குளப் பிரதேசத்துக்குப் பொறுப்பாக ஏ.அமல்ராஜ் ஆகியோர் இருந்து, மிகவும் சிறப்பாக வழி நடத்திவருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## திலீபன் மருத்துவமனையில் 431 பேர் சிகிச்சை

நெடுங்கேணி—

நெடுங்கேணி நயினாமடு திலீபன் மருத்துவ சேவை நிறுவனத்தால் கடந்த மாதம் 431 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

காய்ச்சலினால் 196 பேரும், தொய்வு நோயினால் 12 பேரும், நீரிழிவு நோயால் 11 பேரும், குருதி அழுத்தத்தால் 13 பேரும் சுவாச வழித் தொற்றால் 81 பேரும், பாம்புக் கடியினால் 2 பேரும், வேறு நோய்களால் 36 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த நிலையத்தின் ஊடாக இராம தரிசிப்பு - தொற்று நோய் சம்பந்தமான வழிப்புணர்வூட்டல் போன்றவை நடைபெற்றன. அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கான முதலுதவி வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

# நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கும் முகமாக மன்னாரில் மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடித்திட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு படகுகள், வள்ளங்கள் வழங்கும் நிகழ்வு - நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வு மன்னார் மாவட்டத்திலுள்ள பாலப்பெருமாள் கட்டு வட் டக்கண்டல் கிராமத்திலுள்ள பாடசாலையில் மன்னார் நன்னீர் மீன்பிடி கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் மங்கள விளக்கை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவப் பொறுப்பாளர் சி.கரிகாலன், யூ.என்.டீ.பி. மன்னார், வவுனியா மாவட்ட அபிவிருத்தி திட்ட இணைப்பாளர் கவாகசன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வே.விசுலிங்கம், யூ.என்.டீ.பி இணைப்பாளர் கவாகசன், தமிழர் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஆகியோர் நிகழ்த்தினர்.

60 மீன்பிடி சிறு படகுகள், 400 மீன்பிடி வலைகள் உட்பட 12 மீன்பிடி சங்ககளைச் சேர்ந்தவர்களுக்கு 29 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட கடல் தொழில் நீரியல்வள திட்ட இணைப்பாளர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் செ.செழியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



வட்டக்கச்சி - மாயவனூர் கிருஷ்ணன் ஆலயத்தின் பின்புற வீதியில் கத்தியால் வெட்டப்பட்டு இறந்த நிலையில் ஒருவரின் சடலத்தையும், வட்டக்கச்சி காவல்துறை விசாரணைகளில் ஈடுபடுவதையும் படத்தில் காணலாம்.

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு வலய தொண்டர் ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் - இன்று காலை 8.30 மணிக்கு புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெறவுள்ளதால், அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு முல்லைத்தீவு வலய தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

## பனையில் இருந்து வீழ்ந்து உயிரிழப்பு

புதுக்குடியிருப்பு—

பனையால் வீழ்ந்தவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் 1 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பொன்னன் தம்பிராசா (வயது 53) என்பவரே உயிரிழந்தவராவர்.

கடந்த 28ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர், கடந்த 29 ஆம் திகதி சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார். இவரது சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனம்; முல்லைத்தீவில் ஏற்பாடுகள் தீவிரம்!

வவுனியா தேசிய எழுச்சி மாநாட்டின் பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக, முல்லைத்தீவு மாவட்ட எழுச்சிப் பிரகடனத்தைஉணர்வெழுச்சியுடன் நடத்துவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள்முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட ரீதியிலான எழுச்சிப் பிரகடனம் எதிர் வரும் 14 ஆம் திகதி புதுக்குடியிருப்புமாலதிவிளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் சகல பிரதேசங்களிலும் நடைபெற்று வருகிறது.

இதனடிப்படையில் கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட எழுச்சிப் பிரகடனம், ஒருங்கமைப்பு தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் சிவனடியார், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தயாபரன், முல்லைத்தீவு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் ரங்கன், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் மரியராசா, முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் அரசதிணைக்கள பணியாளர்கள், கிராம அலுவலர்கள், கிராமக்குழுக்கள், மாதர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### செப்ரெம்பர் - 02

1752 : பிரிட்டனும் - அமெரிக்காவும் ஜீலியன் கலண்டர் முறையில் இருந்து கிரிகோரியன் கலண்டர் முறைக்கு மாறியது. இன்றைய இரவை நீண்ட நெடும் இரவு எனக் குறிப்பிடுவர். 2 ஆம் திகதி உறங்கச் சென்றவர்கள் மறுநாள் காலை வழிக்கும் போது 14 ஆம் திகதியாக இருந்தது.

1865 : அல்ஜீப்ரா ஒவ்வெக்டர் இனைக் கண்டுபிடித்தவர்களில் ஒருவரான பிரிட்டிஸ் கணக்கியலாளர் சேர் வில்லியம் ரோவன் ஹாமில்ட்டன் மரணமடைந்தார்.

1913 : பிரான்சில் ஜீவிசி என்னுமிடத்தில் அடால்ஃப் பெகாட் என்பவர் தலைகீழாக விமானம் ஒட்டிச் சாதனை படைத்தார்.

1927 : தனி ஒரு கட்சி மட்டுமே ஆளும் நாடாக துருக்கி மாறியது. அங்கு மக்கள் கட்சித் தலைவரான முஸ்தபா கேமல் என்பவருக்கு அரசை நிர்வகிக்கும் பணியாளர்களை நியமனம் செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டது.

1939 : பிரிட்டனில் தேசியப் பணிச்சட்டத்தின் கீழ் 19 வயது தொடக்கம் 41 வயது வரையான ஆண்கள் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

1945 : டோக்கியோ விரிகுடாவில் யு.எஸ்.எஸ்.மிஸௌரி என்னும் போர்க்கப்பலில் வைத்து ஜெனரல் டக்ளஸ் மெக் ஆர்தர் முன்னிலையில் ஜப்பான் சரணாகதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. நேசநாடுகளில் ஜப்பான் வெற்றித்திருநாள் கொண்டாடப்பட்டது.

1945 : வியட்நாம் விடுதலை அடைந்ததாக ஹோசிமின் அறிவித்தார்.

1947 : ஐக்கிய நாடுகள் சாசனத்தின்படி சமாதானத்துக்கும், பாதுகாப்புக்குமான ரியோடி ஜானெய்ரோ எனப்படும் முதலாவது பிராந்திய உடன்படிக்கை ஏற்பட்டது. அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய அமெரிக்க ஜனாதிபதியின் சொற்பொழிவுக்குப் பின்னர் பத்தொன்பது மேற்கு நாடுகளைச் சேர்ந்த 103 பிரதிநிதிகள் ஒப்பமிட்டனர்.

1958 : சீனாவின் பெய்ஜிங்கில் முதன் முதலாக முதலாவது தொலைக்காட்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

1965 : சீனாவில் கலாசாரப் புரட்சி தொடங்கியது. ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் மக்கள் புரட்சி தொடங்குவதன் மூலம் அமெரிக்கா மேற்கு ஐரோப்பா ஆகிய நாடுகளை வெற்றி கொள்ள முடியும் என்று சீன பாதுகாப்பு அமைச்சர் லின்பியோ அறிக்கை வெளியிட்டார்.

1971 : நிலவில் இருந்து மண்மாதிரிகளை எடுத்துவர லூனா - 18 என்ற விண்கலம் ரஷ்யா விண்ணில் செலுத்தியது. இந்த ஊர்தி நிலாவில் வளமைக் கடல் என்ற பகுதியில் நொருங்கி வீழ்ந்துவிட்டது.

1984 : பிலிப்பைன்ஸ் நாட்டின் பல பகுதிகளிலும் மிகக் கடுமையான புயல் வீசியது. ஆயிரக்கணக்கில் மக்கள் இறந்தனர்.

1992 : அணி சேரா நாடுகளது பத்தாவது உச்சி மாநாடு ஜகார்த்தாவில் நடைபெற்றது.

1993 : இஸ்ரேல் - பலஸ்தீன விடுதலை இயக்க சமாதானப் பேச்சு வார்த்தையை ஈராக் கடுமையாக எதிர்த்தது. பலஸ்தீன விடுதலை இயக்கத்துடனான தனது உறவுகளைத் துண்டித்துக் கொள்ளப் போவதாக எச்சரித்தது.

1994 : அயர்லாந்தில் I.R.A இயக்கம் நிபந்தனையற்ற சண்டை நிறுத்தத்துக்கு சம்மதம் தெரிவித்தது.

1994 : இந்திய விமாப்படையைச் சேர்ந்த பெண்ணான ஹரிதா கௌர் டியோல் பெங்களூரில் அவ்ரோ எச்.எஸ்.748 என்ற போக்குவரத்து விமானத்தை 10000 அடி உயரத்தில் தனியாக ஓட்டிச் சென்று சாதனை புரிந்தார். இந்திய விமானப் படையில் தனியாக விமானம் ஓட்டிய முதல் பெண்மணி இவராவார்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

வைர வரிகள்

சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

திருவள்ளுவர்

## நமது நோக்கு

# நசுக்கப்படும் குரல் வளைகளும்; ஓங்கி ஒலிக்கும் குரல்களும்

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்களுக்கெதிரான சிங்கள-பௌத்த பேரினவாத சக்திகளதும், அவர்களுக்கு ஆதரவான சக்திகளதும் எதிர்ப்பு மற்றும் அச்சுறுத்தல் நடவடிக்கைகள் மட்டுமல்ல - அவர்களைக் கொன்றழிக்கும் நடவடிக்கைகளும், அண்மைக்காலமாக தீவிரமடைந்து வருவதானது, மிகவும் கவலை தரும் விடயமாகியுள்ளது.

ஊடகவியல் சுதந்திரத்துக்கு இலங்கையின் கடந்தகால ஆட்சியாளர்கள் எந்தளவுக்கு அச்சுறுத்தலாக இருந்தார்கள் என்பதை புள்ளிவிபரப்பட்டியல் அடிப்படையில் விபரிக்கவேண்டிய அவசியமேயில்லை. அந்தஅளவுக்கு அது வெளிப்படையானதும், பகிரங்கமானதுமாகும்.

கருத்தியல் சுதந்திரத்தை - கருத்தியல் ரீதியிலேயே எதிர்கொள்ளும் சர்வதேச ஜனநாயக அரசியல் நாகரிகமானது, இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு கடந்த சில தசாப்தகாலமாக இல்லாது போய்விட்டதன் பின்னணியில் அவர்களின் ஆட்சியியல் அதிகார சுயநலமே மையங்கொண்டு இயங்கிவந்தது என்றே கூறவேண்டும்.

அரசியலில் நேர்மையீனம், ஊழல், மோசடி, மற்றும் ஜனநாயகத் தன்மையின்மை போன்றவை அதிகரிக்கும்போது, இவற்றால் பாதிப்புக்குள்ளாகும் தனிநபர்கள், பொதுமக்கள், நிறுவனங்கள் மற்றும் சிறுபான்மையின மக்கள்சார்பில் அவர்கள் பக்கமுள்ள நியாயத்துக்கு வலுச்சேரக்கும் வகையில் - குரல் கொடுப்பதும், மக்களிடையே கருத்து நிலைப்பாட்டை உருவாக்குவதும் வெகுஜன தொடர்பூடகங்களேயாகும்.

ஊடகங்களின் பணியென்பது மக்களுக்கு உள்ளதை - உண்மையை உரைப்பதேயாகும். சமூக, தேச மற்றும் இன விரோதிகளை இனங்காட்டி, அவர்களால் மக்களுக்கு ஏற்பட்டுவரும் துன்ப - துயர அவலங்களை அம்பலப்படுத்தி, சமூக விழிப்புணர்வை அறிவுபூர்வமாகவும், உணர்வுபூர்வமாகவும் தெளிவுபடுத்தும் பணியில் தம்மை அர்ப்பணித்து செயற்படுபவர்களே ஊடகவியலாளர்களாவர்.

அதனால்தான் அரசியல் சுயநலமிகளும், ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபடும் உயரதிகாரிகளும், ஆட்சியாளர்களும், சமூக மற்றும் தேசிய விரோதிகளும் - ஊடகவியலாளர்களை வெறுப்புடனும், கடுப்புடனும் நோக்குபவர்களாக உள்ளனர். அவர்களின் பார்வையில் ஊடகவியலாளர்கள் எதிரிகளாகவே உள்ளனர்.

இந்த வகையிலேயே இன்று தமிழ் ஊடகவியலாளர்கள் - பௌத்த - சிங்கள பேரினவாத சக்திகளாலும், அவர்களின் ஆதரவுக் குழுக்களாலும் பல்வேறு வகையில் அச்சுறுத்தல்களுக்கும், தாக்குதல்களுக்கும் தொடர்ந்து இலக்காகிவருவதுடன், வெறும் எழுத்தையும், எழுதுகோலையும் நம்பி தமது வாழ்க்கையை போராடிக்கழிக்க முயன்று உழைக்கும் நிராயுதபாணிகளான அவர்கள் கொல்லப்பட்டும் வருகிறார்கள்.

இந்த மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல், கொலை நடவடிக்கைகளின் பின்னணியில் இயங்கும் சக்திகளுக்கு அதிகார வர்க்கத்தினரதும், வலுமிக்க அரசியல் கட்சிகளினதும், அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆயுதப் படையினரதும் வலுவான ஆதரவும், பாதுகாப்பும் உள்ளமை கடந்தகால நிகழ்வுகள் தொடர்பான விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதனை சம்பந்தப்பட்ட தரப்பினர் மறுக்கலாம், நிராகரிக்கலாம். ஆனால், அதனால் உண்மையைப் புதைத்து அழித்துவிட முடியாது. அது என்றோ ஒரு நாள் குற்றவாளிகளை நேருக்கு நேர் விரல்சுட்டி அடையாளம் காட்டவே செய்யும்.

அண்மைக்காலமாக தமிழ் ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் ஆளும் தரப்பினரின் இயலாமையின், ஆற்றாமையின் வெளிப்பாடுகளின் எதிரொலியாகவே உணரப்படுகிறது.

குறிப்பாக கொழும்பிலிருந்து வெளியாகும் சுடர் ஒளி வாரப் பத்திரிகை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், அப்பத்திரிகையின் ஊடகவியலாளர் செய்தி சேகரிக்கச்சென்ற வேளை தாக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டமை, அதே பத்திரிகையின் பணிமனை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டமை போன்ற சம்பவங்கள் பௌத்த தர்மம் பற்றி பெரிதாகப் பேசிவரும் சிங்கள இனவாதிகளின் குரூர ஜனநாயக விரோத மனப்பான்மைக்கு சிறந்த உதாரணங்களாகும்.

அண்மையில் பிரதியமைச்சர் - பொதுவாகவே ஊடகவியலாளர்களைப்பற்றி பொது இடத்தில் வைத்தே அநாகரிகமாக உமிழ்ந்த வார்த்தைகளின் அசிங்கம், ஆட்சியிலுள்ளோர் ஊடகத்துறையினரை எவ்வாறு மதிக்கின்றனர் என்பதற்கு சிறந்த சான்றாகும்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக அரசு ஏதாவது நடவடிக்கைகளை இறுக்கமாக - ஆக்கபூர்வமாக மேற்கொள்ளுமென எவரும் நம்புதல் கடினமே. கடந்த காலத்தில் இதேபோன்று நடைபெற்ற பல சம்பவங்கள் தொடர்பாக அரசுகள் எந்த அக்கறையையும் காட்டியது கிடையாது.


தற்போதைய தமிழ் ஊடகவியலாளர் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்களுக்கு ஜே.வி.பியினர்தான் காரணம் என்று கூறப்படுகிறது. சில சம்பவங்கள் அதனை உறுதிப்படுத்தவும் செய்துள்ளன. எனினும், இதன்மூலம் ஊடகவியலாளர்க்ளுக்கு எந்தவிதமான பாதுகாப்பு உத்தரவாதமும் கிடைக்க எவரும் வழிசெய்வார்கள் என நம்பமுடியாது.

இந்த நிலையில் ஊடகவியலாளர்கள் - குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்களின் எதிர்காலம் பாதுகாப்பற்ற நிலையிலேயே இருக்கப்போகின்றதென்ற செய்தியையே நிகழ்கால சம்பவங்கள் எச்சரிக்கையுடன் தெரிவிக்கின்றன.

எனினும், ஊடகவியலாளரை அச்சுறுத்தி - அழித்து மௌனிக்கவைப்பதன் மூலம் இவர்கள் சாதிக்கபோவது எதுவுமில்லை. ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் உலகளாவிய பரந்த வலையமைப்பை கொண்டவை - கொண்டவர்கள் என்பதால் உள்ளூரில் அமுக்கப்படும் குரல் உலகளாவிய ரீதியில் உண்மையை இன்னும் ஓங்கி ஒலிக்கவே செய்யும் என்ற உண்மையையும் இங்கு கூறிவைக்க வேண்டிய அவசியமும் உள்ளது.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# ஜனாதிபதி வேட்பாளராக ஒரு தமிழர் போட்டியிட்டால்?

நிறைவேற்று அதிகாரம் கொண்ட புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவுசெய்வதற்காகத் தேர்தல் நடக்கப்போகிறது. சந்திரிகா அம்மையாரின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அம்மையாருக்கு அடுத்ததாக ஜனாதிபதிப் பதவிக்கு இன்றைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வேட்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைக் கொண்டுவந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்குப் பின் பிரேமதாஸா குறுகிய காலம் ஜனாதிபதியாக இருந்தார். இவரது மரணத்தினால் அதிர்ஷ்டவசமாகக் கிடைத்த ஜனாதிபதிப் பதவியில் சில மாதங்களே டி.பி.விஜயதுங்காவினால் நீடிக்க முடிந்தது. இப்பொழுது ஜே.ஆரின் ஆட்சிக்குப் பின் அவரின் வாரிசு என்று சொல்லப்படும் ரணில் விக்கிரமசிங்கா ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக நிற்கிறார்.

வேறு சிலரும் சில கட்சிகளின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடக் கூடும். நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கான அறிவிப்பு வெளிவந்ததும் இது தெரியவரும். தமிழ் மக்களின் சார்பில் எல்லோருக்கும் பொதுவாக ஒரு தமிழ் பிரமுகரை நியமித்து தமிழ்க் கட்சிகளும், மக்களும் ஒன்று சேர்ந்து உழைத்து வெற்றி பெறச் செய்ய முடியாதா? அப்படி வெற்றி பெற்றால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற முறையில் இனப்பிரச்சினைக்கு ஒரே நாளில் கூட நல்ல முடிவைக் காண முடியுமல்லவா? என்று என் முன் அமர்ந்திருந்த நண்பர் பரமசிவம் கேட்டார்.

உமது கேள்வியில் உமது ஆசைக் கனவுகள் வெளிப்படுகின்றன. ஆனால், இது இங்கு நடைபெறக்கூடிய விஷயமல்ல. மேல் நாடுகளில் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் நிழல் மந்திரி சபையின் தலைவராகக் கருதப்படுபவர். இவரே அடுத்த பொதுத் தேர்தலில் நாட்டின் பிரதம மந்திரியாக வருவாரென்று எதிர்பார்க்கப்படுபவர்.

நமது நாட்டின் அரசியலமைப்பில் இது நடைபெறக் கூடியதல்ல. ஆனாலும் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் இலங்கையில் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபின் மேல் நாடுகள் இவரை அடுத்த பிரதம மந்திரியாக வரக்கூடியவர் என நினைத்து விடுவார்களோ என்று கூட சிங்களவர் அஞ்சினர். அமிர்தலிங்கத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. ஒரு நாட்டின் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்பட்டது இதுவே உலக வரலாற்றில் முதல் தடவையென்று சொல்லலாம்.

அமிர்தலிங்கம் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நடந்த விவாதம் இனவெறியை தமிழ் மக்களுக்கு எதிராகத் தூண்டி விடுவதற்கே பயன்பட்டது. எதிர்க்ட்சித் தவைராக ஒரு தமிழர் தெரிவு செய்யப்பட்டதற்கே சிங்களப் பேரினவாதம் சகிக்க முடியாமல் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வந்து நாடு முழுவதும் இனவெறியைக் கிளப்பிவிட்டது. இப்போது ஜனாதிபதிப் பதவிக்கு ஒரு தமிழர் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கு சிங்களப் பேரினவாதம் விட்டு வைக்குமா? என்று கேட்டேன்.

சிங்கள பௌத்தர் ஒருவர் தான் இலங்கையின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டுமென்று பிரசாரம் செய்யப்படும் கட்சிகளும் இப்படிப்பட்ட ஒருவரையே ஜனாதிபதிப் பதவிக்கு வேட்பாளராக நியமிப்பார்கள்.

ஆனால் சிங்கள பௌத்தர்தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டுமென்று அரசியலமைப்பில் இதுவரை கூறப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. என்றாலும் தமிழ் மக்கள் எல்லா வேறுபாடுகளையும் மறந்து பொதுவாக ஒரு தமிழரை வேட்பாளராக நிறுத்துவதென்பது நடைபெற முடியாத விஷயம்.

இதுமட்டுமல்ல, நாடாளுமன்ற சபாநாயகர் பதவிக்கே ஒரு தமிழர் சேர்.வைத்தியலிங்கம் துரைசாமிக்குப் பின் தெரிவுசெய்யப்பட்டதாகத் தெரியவில்லை. பிரதி சபாநாயகராகவும் குழுக்களின் தலைவராகவும் தமிழர் தெரிவு செய்யப்பட்டதுண்டு. அப்படித்தான் ஒரு தமிழர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அவர் மற்றொரு கதிர்காமர் போலவோ, டக்ளஸ் போலவோ இருந்துவிட்டால் என்ன செய்வது? என்று கேட்டார் பரமசிவம்.

இப்பொழுது தமிழ் மக்களுக்குத் தேவை இலங்கையின் ஜனாதிபதிப் பதவியல்ல. தமிழ் மக்கள் தமது தாயக பூமியில் தாங்கள் இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைத்து தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வது தான் இன்று அவர்களுக்குத் தேவை.

தமிழ் மக்கள் தமது தாயக பூமியில் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு அடித்தளம் இட்டு தாயக மண்ணில் பெரும் பகுதியை மீட்டுத் தமது நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர். மிகுதிப் பகுதியிலும் தமது இழந்த ஆட்சியை மீட்டெடுப்பது தான் முக்கியம். சிங்கள மக்கள் தமது பகுதியில் தமது ஆட்சியை நடத்தட்டும்.

எமது சுதந்திரத்திற்கும் எமது பாதுகாப்புக்கும் அவர்கள் இடையூறாக இல்லாமலிருந்தால் போதும். ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகத்திலிருந்து சிங்களப் படைகளும், சிங்கள நிர்வாகமும் வெளியேறினால் போதும். இதுவே இன்று தமிழ் மக்களின் கோரிக்கையாகும் என்று சொன்னேன்.

இதைச் சிங்கள மக்கள் உணர்ந்து கொண்டால் மலேசியாவும், சிங்கப்பூரும் போல் இலங்கையிலும் சிங்களவர்களும்; தமிழர்களும் தாங்கள் தங்கள் தாயகத்தில் தங்களுக்கென ஜனாதிபதிகளைத் தெரிவு செய்து சகோதரத்துவமாக வாழமுடியும் என்று சொல்லிக் கொண்டு நடந்தார் பரமசிவம்.

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்கு தெரிவானோர் விபரம்

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப் பட்டவர்களின் விபரங்களை தமிழீழ நிதித்துறை வெளியிட்டுள்ளது.
பிரதேச ரீதியாகத் தெரிவானோர்களின் விபரம் வருமாறு:

தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல் - 2005
நிதித்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்

**உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு**
**மூப்படிப்படையில் தெரிவானோர்**

நேற்றைய தொடர்ச்சி....

43 யா/உ/293 திரு. முருகேசு மகேசன்
44 யா/உ/309 திரு. நாகலிங்கம் குமாரகுருநாதன்
45 யா/உ/316 திருமதி. சிவபாக்கியம் மயில்வாகனம்
46 யா/உ/323 திருமதி. இரத்தினம் மயில்வாகனம்
47 யா/உ/339 திருமதி. சிவபாக்கியம் நடராசா
48 யா/உ/344 திருமதி. சரஸ்வதி பத்மநாதன்
49 யா/உ/347 திரு. சுப்பையா சின்னத்துரை
50 யா/உ/358 திரு. கந்தர் ஐயாத்துரை
51 யா/உ/359 திருமதி. கிறேஸ் ஜெபமணிபோல்
52 யா/உ/364 திரு. சபாபதி கந்தசாமி
53 யா/உ/383 திரு. சீனியப்பா நாகலிங்கம்
54 யா/உ/390 திரு. சாமுவேல் பீற்றர்
55 யா/உ/395 திரு. தில்லையம்பலம் பஞ்சாச்சரம்
56 யா/உ/399 திரு. ராமலிங்கம் ரட்ணசிங்கம்
57 யா/உ/400 திருமதி. இராசமணி சண்முகநாதன்
58 யா/உ/403 திரு. அரியகுட்டி இராசரத்தினம்
59 யா/உ/422 திரு. கந்தையா சிவசுப்பிரமணியம்
60 யா/உ/429 திரு. சின்னத்துரை சிவபெருமான்
61 யா/உ/442 திருமதி. தெய்வானைப்பிள்ளை கனகசபை
62 யா/உ/443 திரு. கணபதி துரைராசா
63 யா/உ/451 திரு. பொன்னம்பலம் விஜயரத்தினம்
64 யா/உ/466 திரு. ஐயம்பிள்ளை வைத்திலிங்கம்
65 யா/உ/474 திரு. கந்தையா நடராசா
66 யா/உ/475 திரு. ஆறுமுகம் நடராசா
67 யா/உ/488 திரு. ஆறுமுகம் நடேசன்
68 யா/உ/489 திருமதி. அதேலம்மா சூசைப்பிள்ளை
69 யா/உ/491 திருமதி. கமலா சுகுணராஜா
70 யா/உ/496 திரு. கார்த்திகேசு சயலொனிபவன்
71 யா/உ/497 திரு. வல்லிபுரம் செல்லத்துரை
72 யா/உ/498 திரு. கந்தப்பு செல்லத்துரை
73 யா/உ/508 திரு. மேன் சாமுவேல் அரியநாயகம்
74 யா/உ/519 திரு. சபாபதி பசுபதி
75 யா/உ/529 திரு. வைத்திலிங்கம் துரையப்பா
76 யா/உ/539 திரு. வீ. தம்பிராசா திருநாவுக்கரசு (நாவேந்தன்)
77 யா/உ/540 செல்வி. வசந்தினி இரத்தினதயா
78 யா/உ/549 திரு. சுப்பிரமணியம் குமாரசாமி
79 யா/உ/551 திரு. தம்பிப்பிள்ளை கந்தசாமி
80 யா/உ/578 திரு. இளையதம்பி செல்வரட்ணம்
81 யா/உ/582 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
82 யா/உ/587 திரு. சின்னத்தம்பி சிவராஜசிங்கம்
83 யா/உ/599 திரு. கந்தையா அம்பலவாணர்
84 யா/உ/611 திரு. பொன்னம்பலம் இளையதம்பி
85 யா/உ/614 திருமதி. ஞானமணி வல்லிபுரம்
86 யா/உ/615 திரு. அம்பலம் ஞானதுரை
87 யா/உ/617 திரு. சுப்பையா ஐயாத்துரை
88 யா/உ/632 திரு. இரத்தினம் கணேசன்
89 யா/உ/633 திரு. காத்தி கிருஷ்ணன்
90 யா/உ/635 திரு. வேலுப்பிள்ளை கிருஷ்ணசாமி
91 யா/உ/655 திரு. வினாசித்தம்பி கனேசதாஸ்
92 யா/உ/662 திரு. கதிர்காமு கோபாலபிள்ளை
93 யா/உ/669 திரு. கதிர்காமு கந்தையா
94 யா/உ/670 திருமதி. கனகம்மா கந்தையா
95 யா/உ/673 திரு. அம்பலம் முருகேசம்பிள்ளை
96 யா/உ/675 திரு. முருகேசு முதலித்தம்பி
97 யா/உ/678 திரு. கார்த்திகேசு மயில்வாகனம்
98 யா/உ/683 திருமதி.மகேஸ்வரி இராமுப்பிள்ளை
99 யா/உ/687 திரு. கந்தையா நடராசா
100 யா/உ/688 திரு. சின்னத்துரை நடராசா
101 யா/உ/694 திரு. சுப்பையா நல்லையா
102 யா/உ/706 திரு. சிவகுரு பஞ்சாட்சரம்
103 யா/உ/718 திரு. மாணிக்கம் இராசரத்தினம்
104 யா/உ/722 திரு. நன்னித்தம்பி இராமநாதன்
105 யா/உ/729 திருமதி. கனகேஸ்வரி பசுபதிப்பிள்ளை
106 யா/உ/732 திரு. கனகசபை இராசரத்தினம்
107 யா/உ/733 திரு. கந்தையா இராசரத்தினம்
108 யா/உ/739 திரு. வேலாயுதம் சுப்பிரமணியம்
109 யா/உ/744 திரு. தம்பியப்பா சிவசுப்பிரமணியம்
110 யா/உ/768 திரு. அப்பாத்துரை சண்முகநாதன்
111 யா/உ/773 திரு. முத்தையா சபாரத்தினம்
112 யா/உ/779 திரு. தம்பிமுத்து செல்லத்துரை
113 யா/உ/798 திரு. வல்லிபுரம் திருநாவுக்கரசு
114 யா/உ/803 திரு. சுந்தரம் திருச்செல்வம்
115 யா/உ/804 திரு. மார்க்கண்டு தங்கராசா
116 யா/உ/813 திருமதி. வாலாம்பிகை பஞ்சாட்சரம்
117 யா/உ/816 திரு. நடராஜஐயர் வீரமணிஐயர்
118 யா/உ/824 திரு. வினாசித்தம்பி வேலுப்பிள்ளை
119 யா/உ/826 திரு. கதிரித்தம்பி வேலும்மயிலும்
120 யா/உ/830 திரு. கந்தையா விஸ்வலிங்கம்
121 யா/உ/837 திருமதி. புஸ்பராணி யேசுரத்தினம்
122 யா/உ/846 திருமதி. ஞானரத்தினம் சிவசம்பு
123 யா/உ/852 திரு. செல்லையா அமிர்தலிங்கம்
124 யா/உ/857 திரு. கனகர் இளையதம்பி
125 யா/உ/872 திரு. வேலாயுதம் கனகரத்தினம்
126 யா/உ/875 திரு. வீரசிங்கம் கந்தசாமி
127 யா/உ/876 திருமதி. கணேஸ்வரி கெங்காதரம்
128 யா/உ/879 திரு. கந்தையா கனகசபை
129 யா/உ/880 திரு. கதிரேசு கந்தையா
130 யா/உ/894 திருமதி. நாகம்மா சுப்பிரமணியம்
131 யா/உ/895 திரு. ஆறுமுகம் நடேசர்
132 யா/உ/922 திரு. சுப்பையா இராசரட்ணம்
133 யா/உ/925 திரு. சின்னத்தம்பி செல்வானந்தன்
134 யா/உ/929 திருமதி. இரத்தினஅம்மாமுருகையா
135 யா/உ/934 திரு. சிவசுப்பிரமணிஐயர் சிவசரவணபவன்
136 யா/உ/936 திரு. இராசையா செல்லையா
137 யா/உ/938 திரு. வல்லிபுரம் சபாபதி
138 யா/உ/950 திருமதி. சிவாம்பிகை தியாகராசா
139 யா/உ/951 திரு. சிவசம்பு சிவநேசன்
140 யா/உ/953 திரு. செல்லையா சண்முகநாதன்
141 யா/உ/960 திருமதி. சரஸ்வதி தருமலிங்கம்
142 யா/உ/972 திரு. இராசையா சபாரத்தினம்
143 யா/உ/977 திரு. சின்னக்குட்டி தம்பிஐயா
144 யா/உ/983 திரு. வேலுப்பிள்ளை தியாகராசா
145 யா/உ/985 திரு. சிவசம்பு தனபாலசிங்கம்
146 யா/உ/990 திரு. அப்பாப்பிள்ளை தேவராசன்
147 யா/உ/997 திரு. இராமு வீரசிங்கம்
148 யா/உ/1011 திரு. சின்னட்டிப்பிள்ளை தம்பிராசா
149 யா/உ/1015 திரு. கந்தையா கந்தவனம்
150 யா/உ/1017 திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி
151 யா/உ/1032 திரு. இராசையா சச்சிதானந்தன்
152 யா/உ/1039 திரு. தம்பையா சிவம்
153 யா/உ/1044 திருமதி. சுகிர்தமலர் அமரசிங்கம்
154 யா/உ/1049 திரு. வாஞ்சீஸ்வரக்குருக்கள் முத்துக்குமாரசாமிசர்மா
155 யா/உ/1069 திரு. வேலாயுதம்பிள்ளை செல்லையா
156 யா/உ/1091 திரு.சபாபதிப்பிள்ளை பரராஜசிங்கம்
157 யா/உ/1121 திருமதி. சோதிமணி சுப்பிரமணியம்
158 யா/உ/1124 திரு. மயில்வாகனம் சத்தியபாலன்
159 யா/உ/1132 திரு. சின்னப்பு குணசிங்கம்
160 யா/உ/1139 திரு. இராசா கந்தவனம்
161 யா/உ/1140 திரு. ஆறுமுகம் கந்தசாமி
162 யா/உ/1144 திரு. செல்லத்துரை நாகராசா
163 யா/உ/1150 திரு. பேரம்பலம் பரமேஸ்வரநாதன்
164 யா/உ/1152 திரு. முருகர் பொன்னர்
165 யா/உ/1160 திரு. கந்தையா சண்முகநாதன்
166 யா/உ/1163 திரு. காசிப்பிள்ளை சங்கரப்பிள்ளை
167 யா/உ/1177 திரு. ஸ்ரீபன் அரியரத்தினம்
168 யா/உ/1178 திரு. இராமு ஆனந்தசுந்தரம்
169 யா/உ/1179 திரு. சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை
170 யா/உ/1185 திரு. நாகமுத்து கந்தசாமி
171 யா/உ/1186 திரு. இம்மானுவேல் யோசெவ்கென்றி
172 யா/உ/1196 திருமதி. கனகமலர் சீவரட்ணம்
173 யா/உ/1198 திரு. மாணிக்கம் கனகரத்தினம்
174 யா/உ/1205 திரு. முத்தையா முத்துச்சுவாமி
175 யா/உ/1207 திரு. சவுந்தரையா எட்வேட் நவரெத்தினராஜா
176 யா/உ/1220 திரு. சின்னத்தம்பி சிற்றம்பலம்
177 யா/உ/1224 திரு. தம்பையா சிவலிங்கம்
178 யா/உ/1233 திரு. ஆனந்தசுந்தரம் சண்முகறாஜா
179 யா/உ/1234 திரு. வீரகத்தி சின்னத்துரை
180 யா/உ/1236 திருமதி. தங்கம்மா வெற்றிவேலு
181 யா/உ/1237 திருமதி. தவமணி பாலசிங்கம்
182 யா/உ/1242 திரு. நாகலிங்கம் விநாயகமூர்த்தி
183 யா/உ/1245 திரு. செல்லையா அமரசிங்கம்
184 யா/உ/1248 திரு. தம்பு அப்பலிங்கம்
185 யா/உ/1252 திரு. தம்பு குலசேகரம்
186 யா/உ/1264 திரு.பொன்னம்பலம் பொன்னுத்துரை
187 யா/உ/1274 திரு. மாணிக்கம் சிவரத்தினம்
188 யா/உ/1277 திரு. சின்னத்தம்பி சிவராசா
189 யா/உ/1281 திரு. சிதம்பரப்பிள்ளை சிவகுரு
190 யா/உ/1297 திரு. சுந்தரம் ஈஸ்வரதாஷ்
191 யா/உ/1314 திரு. பொன்னையா கதிரவேலு
192 யா/உ/1318 திருமதி. லட்சுமி ராஜரட்ணம்
193 யா/உ/1319 திரு. மாதர் மாணிக்கம்
194 யா/உ/132 திரு. லூக்காஸ்பிள்ளை மாசலீன்
195 யா/உ/1321 திருமதி. மனோன்மணி சிவஞானம்
196 யா/உ/1327 திருமதி. பேரின்பநாயகி கதிரவேலு
197 யா/உ/1336 திரு. சீவரத்தினம் செல்வரத்தினம்
198 யா/உ/1337 திரு. செல்லையா சங்கரலிங்கம்
199 யா/உ/1343 திரு. வயித்திலிங்கம் சுப்பிரமணியம்
200 யா/உ/1344 திருமதி. தவமணி சிவபாதசுந்தரம்
201 யா/உ/1346 திரு. நாகலிங்கம் செல்வரத்தினம்
202 யா/உ/1351 திரு. வயித்திலிங்கம் சிவசுப்பிரமணியம்
203 யா/உ/1364 திரு. பேரம்பலம் வாமதேவன்
204 யா/உ/1367 திரு. பொன்னையா அப்பாக்குட்டி
205 யா/உ/1368 திருமதி. அன்னம்மா பொன்னையா
206 யா/உ/1370 திருமதி. அன்னலட்சுமி வரோதயசிங்கம்
207 யா/உ/1396 திரு. கந்தையா குணசிங்கம்
208 யா/உ/1398 திருமதி. கண்மணி நடராசா
209 யா/உ/1403 திரு. முருகேசு கந்தையா
210 யா/உ/1411 திரு. பொன்னையா முருகேசு
211 யா/உ/1415 திருமதி. பொன்னம்மா மார்க்கண்டு
212 யா/உ/1418 திரு. சங்கரப்பிள்ளை நடராசா
213 யா/உ/1419 திருமதி. நல்லபிள்ளை முருகேசு
214 யா/உ/1427 திருமதி. நாகம்மா சந்தியாப்பிள்ளை
215 யா/உ/1439 திரு. இளையதம்பி புவனாயக்கபாகு
216 யா/உ/1451 திரு. வல்லிபுரம் இராசையா
217 யா/உ/1474 திரு. செல்லப்பா சுப்பிரமணியம்
218 யா/உ/1480 திரு. தம்பிமுத்து செல்வரத்தினம்
219 யா/உ/1483 திருமதி. செபரத்தினம் செல்வரத்தினம்
220 யா/உ/1485 திரு. கந்தையா சிவலிங்கம்
221 யா/உ/1493 திரு. மாரிமுத்து செல்லத்துரை
222 யா/உ/1494 திரு. வல்லிபுரம் செல்லையா
223 யா/உ/1497 திருமதி. சின்னமலர் சொர்ணம் மனுவேற்பிள்ளை
224 யா/உ/1503 திரு. சின்னத்தம்பி சிவலிங்கம்
225 யா/உ/1506 திரு. பொன்னையா சுந்தரம்பிள்ளை
226 யா/உ/1512 திரு. சீனிக்குட்டி சுப்பிரமணியம்
227 யா/உ/1522 திருமதி. சந்திரகாந்தியம்மா விஜயசிங்கம்
228 யா/உ/1525 திரு. தம்பு சிவஞானசுந்தரம்
229 யா/உ/1529 திரு. ஐயாத்துரை தம்பிராசா
230 யா/உ/1532 திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
231 யா/உ/1533 திரு. கந்தையா தம்பிராசா
232 யா/உ/1544 திரு. இளையதம்பி துரையப்பா
233 யா/உ/1558 திரு. நாகலிங்கம் ஆறுமுகராசா
234 யா/உ/1565 திரு. தம்பையா அரியரத்தினம்
235 யா/உ/1566 திருமதி. அம்பிகாதேவி சிவப்பிரகாசம்
236 யா/உ/1583 திரு. காசிப்பிள்ளை கணேசபிள்ளை
237 யா/உ/1590 திருமதி. கமலாட்சி சர்வணமுத்து
238 யா/உ/1595 திரு. கந்தர் காசிப்பிள்ளை
239 யா/உ/1598 திரு. குழந்தைத்தம்பி முருகையா
240 யா/உ/1609 திரு. வயிரவிப்பிள்ளை நடராஜா
241 யா/உ/1611 திரு. பொன்னு நடராசா
242 யா/உ/1614 திருமதி. பூமணி நடராஜா
243 யா/உ/1618 திரு.வேலுப்பிள்ளை பொன்னுத்துரை
244 யா/உ/1620 திரு. நன்னித்தம்பி பொன்னம்பலம்
245 யா/உ/1623 திருமதி. புனிதவதிஅம்மா சண்முகராசா
246 யா/உ/1625 திருமதி.பத்மாசினிதேவி சீவரத்தினம்
247 யா/உ/1636 திரு. நடராசா இரத்தினராசா
248 யா/உ/1637 திரு. தம்பையா சுந்தரம்பிள்ளை
249 யா/உ/1640 திருமதி. சிவகாமிப்பிள்ளை இளையதம்பி
250 யா/உ/1641 திரு. வேலுப்பிள்ளை சண்முகநாதன்
251 யா/உ/1642 திரு. சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை திருஞானசெல்வம்
252 யா/உ/1647 திரு. நமசிவாயம் சுந்தரலிங்கம்
253 யா/உ/1650 திருமதி. சறோஜினிதேவி சுப்பிரமணியம்
254 யா/உ/1651 திரு. கந்தையா செல்லத்துரை
255 யா/உ/1657 திரு. நன்னித்தம்பி சண்முகநாதன்
256 யா/உ/1668 திரு. பொன்னுத்துரை சிவகுருநாதன்
257 யா/உ/1676 திரு. சுப்பிரமணியம் தருமலிங்கம்
258 யா/உ/1680 திரு. சுப்பையா தட்சணாமூர்த்தி
259 யா/உ/1685 திரு. கதிரப்பிள்ளை தம்பிமுத்து
260 யா/உ/1686 திரு. செல்லர் தருமராசா
261 யா/உ/1692 திரு. நாகலிங்கம் சந்திரசேகரம்
262 யா/உ/1693 திருமதி. விசாலாட்சி சிவபாதசுந்தரம்பிள்ளை
263 யா/உ/1698 திரு. சின்னத்தம்பி அரசரத்தினம்
264 யா/உ/1702 திருமதி.அழகேஸ்வரி இரத்தினமகேசன்
265 யா/உ/1707 திரு. வல்லிபுரம் பாலசிங்கம்
266 யா/உ/1709 திரு. சின்னத்தம்பி பாலசிங்கம்
267 யா/உ/1746 திரு. கதிரிப்பிள்ளை நடராசா
268 யா/உ/1748 திரு. சின்னவி நாகமுத்து
269 யா/உ/1751 திரு. தம்பு பொன்னுராஜா
270 யா/உ/1754 திரு. தம்பு பூதப்பிள்ளை
271 யா/உ/1756 திருமதி. புவனேஸ்வரி திருச்செல்வம்
272 யா/உ/1759 திரு. கதிரிப்பிள்ளை இரத்தினம்
273 யா/உ/1762 திரு. கந்தையா இராசரட்ணம்
274 யா/உ/1781 திரு. சின்னத்தம்பி செல்லத்துரை
275 யா/உ/1784 திரு. செல்லையா செல்வரத்தினம்
276 யா/உ/1789 திரு. செல்லையா சிவகுருநாதன்
277 யா/உ/1793 திரு. இராசசிங்கம் சின்னத்துரை
278 யா/உ/1795 திரு. தம்பியையா சிவஞானகுரு
279 யா/உ/1803 திரு. செல்லர் சரவணமுத்து
280 யா/உ/1811 திரு. சீனியப்பா சண்முகம்பிள்ளை
281 யா/உ/1812 திரு. நாகமுத்து திருநாவுக்கரசு
282 யா/உ/1813 திரு. அப்பாத்துரை துரைராசா
283 யா/உ/1816 திரு. சின்னத்தம்பி தங்கலிங்கம்
284 யா/உ/1840 திரு. செல்லப்பா அரியரத்தினம்
285 யா/உ/1841 திரு. தில்லையம்பலம் அம்பலவாணர்
286 யா/உ/1842 திரு. வேலாயுதர் அருளம்பலம்
287 யா/உ/1844 திரு. தம்பிராசா அருமைநாயகம்
288 யா/உ/1849 திரு. மயில்வாகனம் பாலசுப்பிரமணியம்
289 யா/உ/1863 திரு. வீரவாகு ஐயாத்துரை
290 யா/உ/1868 திரு. செல்லத்துரை கந்தசாமி
291 யா/உ/1873 திரு. செல்லப்பா கதிர்காமத்தம்பி
292 யா/உ/1878 திரு. சுப்பையா கந்தசாமி
293 யா/உ/1882 திரு. விசுவலிங்கம் கனகசபாபதி
294 யா/உ/1896 திருமதி. மகேஸ்வரி சின்னத்துரை
295 யா/உ/1910 திருமதி. பத்மாவதி சுப்பிரமணியம்
296 யா/உ/1911 திரு. வைரமுத்து நாகராஜன்
297 யா/உ/1914 திரு. முத்தையா நடராசா
298 யா/உ/1919 திரு. தம்பையா நவரத்தினம்
299 யா/உ/1922 திரு. இராசரத்தினம் நல்லையா
300 யா/உ/1923 திரு. ஐயாத்துரை நல்லையா
301 யா/உ/1927 திரு. நாகலிங்கம் நடராசா
302 யா/உ/1930 திரு. செல்லத்துரை பஞ்சலிங்கம்
303 யா/உ/1936 திரு. கந்தையா பரமலிங்கம்
304 யா/உ/1943 திரு. கந்தையா பொன்னுத்துரை
305 யா/உ/1945 திரு. கந்தையா பஞ்சலிங்கம்
306 யா/உ/1952 திரு. நாகமுத்து பொன்னுத்துரை
307 யா/உ/1954 திரு. பொன்னம்பலம் பத்மநாதன்
308 யா/உ/1959 திரு. பொன்னையா இராமுப்பிள்ளை
309 யா/உ/1960 திரு. பெரியதம்பி இராசநாயகம்
310 யா/உ/1961 திரு. கணபதிப்பிள்ளை நவரத்தினம்
311 யா/உ/1976 திரு. இராசரத்தினம் இரத்தினம்
312 யா/உ/2000 திரு. இரத்தினம் சுந்தரலிங்கம்
313 யா/உ/2001 திரு. சந்தனப்பிள்ளை செல்லத்துரை
314 யா/உ/2009 திரு. நாகலிங்கம் சிவசிதம்பரம்
315 யா/உ/2021 திரு. செல்லையா சிவக்கொழுந்து
316 யா/உ/2027 திரு. நாகமுத்து சின்னராசா
317 யா/உ/2029 திரு. இராசையா சோதினாதன்
318 யா/உ/2030 திரு. செல்லையா சுப்பிரமணியம்
319 யா/உ/2033 திரு. கனகசபாபதிக்குருக்கள் சுப்பிரமணியஐயர்
320 யா/உ/2046 திரு.தம்பிமுத்து சின்னராசா
321 யா/உ/2058 திரு.அப்பாப்பிள்ளை திருநாவுக்கரசு
322 யா/உ/2059 திரு.ஐயாத்துரை தியாகராசா
323 யா/உ/2064 திரு.தாமோதரம்பிள்ளை வேலாயுதபிள்ளை
324 யா/உ/2068 திரு.கந்தையா வேலாயுதபிள்ளை

(தொடரும்)


# தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்விலிருந்து...

















நமது ஈழநாடு
Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# ஒரு லட்சம் மக்கள்...

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரை 1995 ஆம் ஆண்டு பரந்தனில் விமானத் தாக்குதலில் வீரச்சாவடைந்த மாவீரர் மேஜர் விமலின் துணைவியார் தமிழ்ச்செல்வி, 1987 ஆம் ஆண்டு அளம்பிலில் இந்திய இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்த மாவீரர் கப்டன் கமலின் தந்தை முத்துச்சாமி அருணாசலம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு மாங்குளத்தில் இந்திய இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்த மாவீரர் கப்டன் வண்ணனின் தந்தை முத்துவேல் சீவரத்தினம் ஏற்றிவைத்தார்.

இதனையடுத்து எழுச்சிச் சுடரை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை, தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த மா.சிவபாலன், சபாரட்ணம், தே.காசிநாதன், நா.கோபாலசிங்கம், ம.சந்திரபாலன், இரத்தினசிங்கம், பொன்னுத்துரை, சொர்ணலிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆசியுரையை கிளிநொச்சி - முல்லைத்தீவு மறைமாவட்ட குரு முதல்வர் பேனாட் அடிகளார், கிளிநொச்சி முருகன் ஆலய பிரதம சிவாச்சாரியார் கு.இரத்தினேஸ்வரக் குருக்கள், யாழ். மக்கள் பணிமனைச் செயலாளர் எஸ்.எம்.ஸகில் மௌலவி, தென்னிந்தியத் திருச்சபையின் ஓய்வுபெற்ற ஆயர் ஜெபநேசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து சிறப்புரைகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி த.சத்தியமூர்த்தி, வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் கருணாரட்ணம் அடிகளார், கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.மதுரநாயகம் ஆகியோரும் - நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன், மனோ கணேசன், ச.கனகரத்தினம், சி.சிவநேசன், சே.ஜெயானந்தமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய எழுச்சிச் செயலணிச் செயலாளர் அ.வேளமாலிகிதன் எழுச்சிப் பிரகடனத்தைச் சமர்ப்பித்தார்.

இந்த நிகழ்வில் - தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி உட்பட போராளிகள், கல்விமான்கள், அரச உயரதிகாரிகள், மதத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அலை அலையாக நின்று - தமது உணர்வுகளை சர்வதேசம் உணர்ந்துகொள்ள வேண்டும், போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும், எமது தலைவர் வே.பிரபாகரன் என உரத்த குரலெழுப்பினர். தேசியத் தலைவரின் உருவப் படங்களைத் தாங்கியவாறு இந்த நிகழ்வில் பொது மக்கள் கலந்துகொண்டனர்.

மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்ற இந்த நிகழ்வு இரவு 8.30 மணியளவில் முடிவடைந்தது. நிகழ்வின் இறுதியில் எழுச்சிப் பிரகடனத்தை தேசியத் தலைவரிடம் ஒப்டைப்பதற்காக அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கனிடம் கையளிக்கப்பட்டது.

வன்னிப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மக்கள் அணியணியாகத் திரண்டுவந்து இந்த எழுச்சிப் பிரகடன நிகழ்வில் பங்கேற்றனர். இந்த நிகழ்வை முன்னிட்டு ஏ-9 வீதியூடான போக்குவரத்து நேற்று நண்பகலுக்குப் பின்னர் பெருமளவு குறைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் ஊடகங்கள் மீதான

# இனவெறித் தாக்குதலைக் கண்டித்து யாழ். பஸ்நிலையம் முன் ஆர்ப்பாட்டம்!



கொழும்பு —

சுடர் ஒளி பத்திரிகை நிறுவனம் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு பாதுகாப்பு ஊழியர் கொலை செய்யப்பட்டமை, பத்திரிகையாளர் யதுர்சன் ஜே.வி.பியினரால் தாக்கப்பட்டமை உள்ளிட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான கெடுபிடிகளைக் கண்டித்து யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ். பஸ் நிலையம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் இனவெறித் தாக்குதல்களைக் கண்டித்து நேற்றுக்காலை 10.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை யாழ். பஸ்நிலையம் முன்பாக குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொல்லாதே கொல்லாதே தமிழ் ஊடகவியலாளரைக் கொல்லாதே!

சிறிலங்கா அரசே தமிழ்ப் பத்திரிகையாளர் கொலையை நிறுத்து!

